பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆடி: 24 நம்பூான்: 4 இதழ்: 179
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-8-78

## வெண்பளிங்கு கல்லறையில் சனிக்கிழமை நல்லடக்கம்

வத்திக்கான், ஆகஸ்ட, 8
பரிசுத்த பாப்பரசர் 6வது சின்னப்பரின் மரணச் சடங்குகள் 12ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்ரோமில் உள்ள கோடைகால அரண்மனையில் மக்களின் தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை சென்பீட்டர்ஸ் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பொதுமக்கள் தரிசனத்துக்காக வைக்கப்படும்,

ஆருவது சின்னப்பரின் பூதவுடலை நல்லடக்கம்செய்ய வெண்பளிங்கு கல்லறை ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

## முத்து தெரிவு

மதுரை ஆக. 8
மதுரை மேயராக திரு. எம். முத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். துணைமேயராக கே. எஸ். சந்தானம் தெரிவாகியுள்ளார்.

மதுரைமாநகராட்சி மன்றத்துக்கான மேயர் தெரிவு இன்று நடைபெற்றபோது அ. இ. தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு. முத்து 47 வாக்குகளும் இவரை எதிர்த்து போட்டியிட்ட இந்திரா காங்கிரஸை சேர்ந்த திரு. த. எஸ். மகாமணி 13 வாக்குகளும் பெற்றனர். துணைமேயராகக் தெரிவு செய்யப்பட்ட திரு. சந்தானம் அ. இ. தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்.

# அரசியல் சட்டமூலம் (130|07) நிறைவேறியது

## 'இந்தநாட்டில் எவரும் இரண்டாந்தரப் பிரஜையல்ல'' --பிரதமர்

(கொழும்பு)

**இலங்கை ஜனநாயக சோஷலிஸகுடியரசு அரசியலமைப்பு சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு, தேசிய அரசுப் பேரவையில் நேற்றிரவு நூற்றிமுப்பது அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. எதிராக ஏழு பேர் வாக்களித்தனர்.**

புதிய அரசியலமைப்புச் சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் பிரதமர் நேற்றிரவு உரைநிகழ்த்திக் [illegible], சரியாக 8.37க்கு கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும், கொத்மலை எம். பி. திரு. ஆனந்த திஸநாயக்காவும் சபைக்குள் பிரவேசித்தனர். அப்பொழுது அரசாங்கத்தரப்பிலிருந்து கூச்சலும், கிண்டல் பேச்சும் எழத்தொடங்கியது. இதனைத் தொடர்ந்து திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா திரு. ஆர். ஜி. சமரநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா, ஜனுப் ஹாலிம் இசாக் ஆகியோர் நுழைந்ததும் சபையில் ஏற்கனவே எழுந்த கூச்சல், நாசூக்கான 'சொல்லம்புகள்' உச்சக் கட்டத்தை அடைந்தன.

### 'ஆம்' என்றூர் தொண்டமான்

வாக்கெடுப்பு சரியாக 8-39க்கு ஆரம்பமானது. பெயர் அழைக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெற்றது. திரு. எஸ். தொண்டமானின் பெயர் அழைக்கப்பட்டதும், சாதகமாக ''ஆம்'' என்று பதிலளித்தபோது, சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது. வாக்கெடுப்பு 8-46க்கு முடிவடைந்தது. சபாநாயகர், வாக்கெடுப்புமுடிவை 8-48க்கு அறிவித்தார்.

அரசியலமைப்புக்கு சாதகமாக 137 பேரும், பாதகமாக 07 பேரும் வாக்களித்தனர். 130 பெரும்பான்மை வாக்குகளால் புதிய அரசியலமைப்பு சட்டமூலத்தின் 2வது வாசிப்பு நிறைவேறியது.

### பிரதமர் பேச்சு

வாக்கெடுப்புக்கு முன்னர் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில், நாட்டின் முன்னேற்றத்துக்கான தடைகளை அகற்ற புதிய அரசியல் அமைப்பு உதவுகிறது என்றும் புதிய அரசியலமைப்பின்கீழ், நாட்டில் புதிய பொருளாதார சோஷலிஸ சமுதாயமொன்று கட்டி எழுப்பப்படுமென்றும், தியாகமனப்பான் மையுடன் நாட்டைக் கட்டி எழுப்ப முன்வாரீர் என்றும் கூறி அழைப்பு விடுத்தார்.

''புதிய அரசியலமைப்பின் கீழ் இந்தநாட்டில் எந்தப்பிரிவினரும் இரண்டாம்தரப் பிரஜையாக இல்லை. மனித அடிப்படை [illegible] நதிரம், இங்குள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் வழங்கப்பட்டுள்ளது. நாடு, மொழி, மதம் ஆகியவற்றிலும் பார்க்க மனிதத்துவம்தான்முக்கியமானது. புதிய அரசியல்சட்டம் மக்களுக்கே அதிகாரங்களை வழங்கியுள்ளது'' என்றும் பிரதமர் பிரேமதாசா கூறினூர். (ம)

## ''யாழ்ப்பாணத்தில் சிங்களவர் பயமின்றி இனிமேல் வாழமுடியாது''

### கமிஷன்முன் வர்த்தகர் சாட்சியம்

(கொழும்பு)

''யாழ்ப்பாணத்தில் சிங்களவர்கள் பயந்துதான் வாழவேண்டியிருக்கிறது. அங்கு சிங்களவர் வாழமுடியாது; வாழ்வதும் அபாயகரமானது.''

இவ்வாறு சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் நேற்று திரு. பொன்சேகா (68 வயது) சாட்சியமளிக்கையில்கூறினூர். அவர் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:

''நான் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் கீதா டீசல் என்ஜினியரிங் நிறுவனத்தை நடாத்துகின்றேன். எனது மகனும் இங்கு வேலை பார்க்கிறூர். நாங்கள் தங்கியிருப்பது மார்ட்டின் வீதியில், எனது கடைக் கட்டிடம் ஒரு தமிழ்ப் பெண்ணுக்குச் சொந்தமானது. எனக்கு தமிழ் வாசிக்கத் தெரியாது. பேசவது விளங்கும்.

''கலவர காலத்தில் சிங்களவரின் கடைகள் தாக்கப்பட்டன. [illegible] நாங்கள் கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குப்போனேம். காலை பத்து மணியளவில் கட்டடப் பொருள்கூட்டுத்தாபனம் மற்றும் சில கடைகளும், எனது கடையும் உடைக்கப்படுவதாக நண்பர் ஒருவர் எனது வீட்டுக்குவந்து கூறினூர். நான் போய்ப்பார்த்தேன். எனது கடையை சிறுவர்கள் உள்விட்டு சுமார் 50 பேர் கொள்ளையடித்துக் கொண்டிருந்தனர். வீதியில் டயர்களைக் கொளுத்தினூர்கள். டைனமைட்டுகள் வீசப்பட்டன, கொள்ளையடித்தவர்களை எனக்குத்தெரியும். நான் யாழ்ப்பாணத்தில் வசிக்க விரும்புவதால் அவர்களின் பெயர்களை இங்கு வெளியிட விரும்பவில்லை.

கடதாசியில் எழுதிக் கொடுக்குமாறு கோரப்பட்டபொழுது, அப்பெயர்களை சாட்சி ஒரு கடதாசியில் எழுதிக் கொடுத்தார்.

''இதன் பின்னர் நான் நாகவிரைக்கு சென்றேன். எனது சொந்த ஊர் தெஹிவளை. நான் அங்கு போகாமல் நீர்கொழும்புக்குச் சென்றேன். கடையைச் சேதப்படுத்தியதன் மூலம் எனக்கு மூன்று லட்சம் ரூபா நஷ்டமேற்பட்டது. பொலிசாருக்கு புகார் செய்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த வருடம் அக்டோபர் மாதம் 14ம் திகதி யாழ். அரசாங்க அதிபரிடம் முறையிட்டேன்.

''யாழ்ப்பாணத்தில் சிங்கள

(8-ம் பக்கம் பார்க்க)

## 'இந்த நாட்டில் சிங்களவருக்கு உரிமையில்லை'

### பேரவையில் அமைச்சர் மத்தியூ

(கொழும்பு)

''யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களவர் தண்ணீர் கேட்டால் கொடுக்கமாட்டார்கள். சாப்பாடுகூட அங்கு சிங்கள மக்களுக்கு கொடுக்கமாட்டார்கள்'' என்று கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ஜி. சிறில்மத்யூ நேற்று தேசிய அரசுப் பேரவையில் பேசுகையில் கூறினூர்.

''யாழ்ப்பாணத்தில் சிங்களவருக்குள்ள நிலை இப்படி உள்ளது. ஆனுல், வெள்ளவத்தையில் எங்கு பார்த்தாலும் தமிழர்கள் இருக்கிறூர்கள். அவர்களை எதுவுமே தடுக்கவில்லை. தடுக்கவும் மாட்டோம். நாம் மேற்கொண்ட புதிய சமுதாயமொன்றைக் கட்டி எழுப்பும் பயணத்தை எவரும் நிறுத்த முடியாது'' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

#### தீக்கிரையானது

''சிங்களவருக்கு திருநெல்வேலியில் ஒருகுடியேற்றத்திட்டம் ஆரம்பிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது பின்னர் தடையாகி, கொழும்புத்துறையில் சிங்கள குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த கலவரத்தில் இக்குடியேற்ற வீடுகள் அனைத்தும் தீக்கிரையாகிவிட்டன. இன்று சிங்களவருக்கு அங்கு காணி இல்லை; வீடு இல்லை. இவற்றை அங்கு வாங்கவும் முடியாது. தமிழருக்கு உரிமை இல்லை என்று தமிழர்கூட்டணி கூறுகின்றது. உண்மையில் இந்தநாட்டில் சிங்களவருக்குத் தான் உரிமைகள் இல்லை. யாழ். நாகவிகாரரை தேரோ எனக்கு ஒரு நீண்ட கடிதம் அனுப்பியிருந்தார். சிங்கள

(8-ம் பக்கம் பார்க்க)

சிதம்பரம்

குளுகுளு கப்பலில் உல்லாச பயணம்

புறப்படுதல்:
திருகோணமலையிலிருந்து 30 ஆகஸ்ட் 1978ம் திகதி.

தங்குமிடங்கள்:
பிநங்கு — 3-9-78 (ஏறத்தாழ 24 மணி நேரம்).
சிங்கப்பூர் — 5-9-78 (ஏறத்தாழ 3½ நாட்கள்).
கெலாங் துறைமுகம் — 9-9-78 (12 மணி நேரம்).
பிநங்கு — 10-9-78 (12 மணி நேரம்).
சென்னை — 15-9-78 (4½ நாட்கள்).

சகல செலவுகளும் உட்பட இலங்கையிலிருந்து சென்று திரும்பும் கட்டணம் ரூ. 3125வும் மேற்கொண்டும்.
மேல் விபரங்கட்குத் தொடர்புகொள்க:

ஆஷா ஏஜன்ஸீஸ் லிமிட்டெட்,
72, நியுபுல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4.
டெலிபோன்: 87892-3

ஆஷா நிறுவனத்தின் முகவர் ஒருவர் 11ந் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 9-00ல் இருந்து பி. ப. 1-00 மணி வரையும்.
ஆகஸ்ட் 12ந் திகதி சனிக்கிழமை மு. ப. 9-00 மணி முதல் பி. ப. 1-00 மணி வரையும்.
151, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரியில் தங்கியிருப்பார். 9987

அனலைதீவுஐயனுர்கோவில் 1ம் திருவிழா சிறப்புநிகழ்ச்சி
இன்று இரவு புதன்கிழமை (9-8-78) 10 மணிக்கு

தமிழ்நாடு கலைமாமணி ஐதீஸ்வர, ஞானநாத சுடர்ஒளி, நந்திஹஸ்த தவில்மேதை
ரி. ஜி. முத்துக்குமரசாமிப்பிள்ளை

அகிலஇந்திய இசைவிழா புகழ்ஒலி ஸ்ரீகரவேக சுரதாளக்கியான கலியுகவரத
தவில்வித்துவான் கைதடி பழனி

வெளியூர் அன்பர்களின் வசதியைமுன்னிட்டு ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான் காரைநகர் துறைமுகங்களிலிருந்து விசேட படகுச்சேவைகள் உண்டு. 0004

## சுன்னுகம் பட்டணசபை

# கேள்விப் பத்திர அறிவித்தல்

01-09-78 முதல் 31-12-81 வரையிலான 3 வருடம்4 மாதங்களுக்கு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் சந்தைக்கடைகளில் வியாபாரம் செய்யும்உரிமைக்கான கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 22-8-1978 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி வரை சுன்னுகம் விசேட ஆணையாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் விண்ணப்பத்தின் பேரில் 21-08-1978 திங்கட்கிழமை நண்பகல் 12-15 வரை சுன்னுகம் விசேட ஆணையாளரிடமிருந்து பெறப்படும் படிவங்களிலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி நிபந்தனைகளையும், மற்றும் கடைகளில் எந்தவிதமான வியாபாரம் செய்யவேண்டும் என்பது பற்றிய விபரங்களையும், சுன்னுகம் விசேட ஆணையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரமுண்டு.

## அட்டவணை

| கடை இல. | கடை அமைந்திருக்கும் வீதியின் பெயர் | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விப் பிணைப்பணம் |
|---|---|---|---|
| 1 | சேர் பொன் இராமநாதன் வீதி | 15/- | 250/- |
| 2 | சந்தை தெற்கு வீதி | 10/- | 100/- |
| 3 | சந்தை தெற்கு வீதி | 10/- | 100/- |

**விசேட ஆணையாளர்,**
பட்டணசபை, சுன்னுகம்.

பட்டண சபை அலுவலகம்,
சுன்னுகம்,
01-08-1978.
10000

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை, கரம்பன்
தீ. அ. இராசையப்பிள்ளை
கைம்பெண்
எலிசபெத் முத்தம்மா
வழக்காளி

இல. ஈடு/12912

எதிராக

ஊர்காவற்றுறை, சரவணை கிழக்கு
1. விஞசித்தம்பி வேலாயுதபிள்ளையும்
2. S. தம்பையா மகள் குணரத்தினம்மாவும்
3. ஆறுமுகம் கதிர்காமநாதனும் (இறந்துவிட்டார்)
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/12912-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் (ஆவணி)மாதம் 21-ந் திகதி 21-8-78) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 2935/-ம், இதில் ரூபாய் 2000/-க்கு 18-1-72 திகதி தொடக்கம் 2-10-73 திகதி வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 564-10 சதமும் 10-8-74ல் ரூபா 1000/-ம், செலவில் ரூபா 200/-ம் இறுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று சரவணையிறை "தம்பாபற்றை" நிலப்பரப்பு 6 3/8ம், பனைகளும் வான்பயிர்களும் எல்லை கிழக்கு முத்துக்குமாரு பெண் இராசம்மாவின் ஆதனம், வடக்கு தம்பியையா பெண் பாக்கியத்துக்கும் செல்லத்துரை பெண் சௌந்தரநாயகிக்குமுரிய ஆதனங்கள், தெற்கு பொன்னுத்துரை பெண் பாக்கியத்துக்கும், முத்துக்குமாரு பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு கணபதிப்பிள்ளை பெண் விசாலாட்சியின் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசிக்கு நிலப்பரப்பு மூன்று குளி 3 3/8ம் அதற்குரிய பனைகளும், வான்பயிர்களும்.

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,

தெல்லிப்பழை,
29-5-1978.
9995

# இன்று கொடியேற்றம்

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 9-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

17ம் திகதி தேர்த்திருவிழாவும். 18ல் தீர்த்தத்திருவிழாவும், 19ல் பூங்காவனமும், 20ல் வைரவர் மடையும், மகா சபையும் நடைபெறும்.

உற்சவநாட்களில் சைவப்பெரியார்களின் சொற்பொழிவுகள் நிகழும்.

வழமைபோல் மாகேஸ்வர பூஜையும் நடைபெறும். (அ)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிஸ்கால் விற்பனை

### மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

வீரசிங்கம் கைம்பெண் மாணிக்கவல்லி,
இலக்கம் 103, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
—வழக்காளி.

வழக்கு இலக்கங்கள்
காசு. சு. 4572, 4573
எதிராக
நரசிங்கம் சின்னத்துரை
வீமம்காமம், தெல்லிப்பளை.
—எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து மேற்குறிக்கப்பட்ட இலக்கங்கள் கொண்ட வழக்குகளிலிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா (காசு. சு. 4572) 3,890ஐயும் மேலும் முதல் ரூபா 3,000க்கு வருடமொன்றுக்கு 100க்கு 12% வட்டி 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 17ந் திகதி தொடக்கம் தீர்வைத் திகதியாகிய 1971ம் ஆண்டு ஆவணி மாதம் 01ந் திகதி வரைக்கும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் சட்ட வட்டியுமாக வருடமொன்றுக்கு 100க்கு 5%ம் 1971ம் ஆண்டு ஆவணி மாதம் 01ந் திகதி தொடக்கம் முழுத்தொகையை கொடுக்கும் வரைக்கும் அத்துடன் கோட்டுச் செலவு ரூபா 303-75 இது வழக்காளிக்கு 1-8-1971ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தால் தீர்வையால் எதிராளியிடமிருந்து பெறவேண்டியதாகும்.

மற்றும்

காசு. சு. 4573 வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 1,908-50ம் மேலும் வட்டி ரூபா 1,850/-க்கு வருடமொன்றுக்கு 100க்கு 12%ம் 17-12-70 தொடக்கம் 01-08-1971 வரையும் அதன் அதன் பின் முழுத்தொகைக்கும் சட்ட வட்டியான வருடமொன்றுக்கு 100க்கு 5%ம், முழுத்தொகை சட்டி முடியும் வரைக்கும் அத்துடன் கோட்டுச் செலவு ரூபா 250-25ம், பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் இரு வழக்கு தொகைகளையும் சேர்த்து அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்திலிருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று, நீர்வேலி இறை 'சுந்தரவத்தை மண்பண்டு' நிலப்பரப்பு 7. இதில் நடுவாக நிலப்பரப்பு 2, குளி 4,1/2 வீடும் செய்பயிர் வான்பயிர்களும் வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றுப்பங்கும் வழிப்பாதை உரித்தும் கிழக்கெல்லை காணிக்கு ஊடாக இதற்கு எல்லை கிழக்கு நரசிங்கம் கனகசபையினுதனம், வடக்கு தம்பு கைம்பெண் தங்கமுத்துவினுதனம், மேற்கு நரசிங்கம் கதிரேசுவினுதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

முு. பத்மநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம். 7-8-78
0002

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

ஈடு 15041

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவில் ரோட்
1. கந்தையா பரமநாதனும் பெண்
2. மிருளாயினிதேவியும்
வழக்காளிகள்

எதிராக
நெட்டிலிப்பாய், கோண்டாவில்.
1. கந்தையா நாகலிங்கமும் பெண்
2. சரஸ்வதியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 15041-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் வருஷம் (21-8-78) ஆவணி மாதம் 21-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 2257/50ம் மேலும் ரூபாய் 1500/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ந் திகதியிலிருந்து தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 448/20.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "கம்பிலாப்புலம்" பர. நில. இலா. 4 இதில் மேற்குப் பக்கமாக பர. நி. இலா 3 நீக்கி மிகுதி பர. நில. இலா. 1 புதிதாகக் கட்டப்படும் கல் வீடும் கிழக்கேயிருக்கும் கிணற்றில் தண்ணீர் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும். இந்தப் பரப்பு ஒன்றுக்கு எல்லை கிழக்கு கந்தையா சின்னராசாவின் ஆதனம், வடக்கு சின்னத்துரை பெண் அன்னம்மாவின் ஆதனம், மேற்கு துரைராசா பெண் இந்திராதேவியின் ஆதனம், தெற்கு கனகசபாபதி பெண் பூபதியினுதனமும் பாதை முகப்பும் இதடங்கலும்.

**நா. ஸ்ரீரங்கநாதன்,**
விற்பனை ஆணையாளர்.

6, கன்னுதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்,
1-7-78.
9999

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

புதிய ஒலிவெற்றி ஆங்கில ரைப்ரைட்டர் விற்பனைக்கு உண்டு. இல. 9, பீற்றர்ஸ், யூபிலிபஜார் பெரியகடை யாழ்ப்பாணம். 9986

### தேவை

களிசான், சேட் தைப்பதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை, பிரதர்ஸ், 21, நவீன மார்க்கட், யாழ்ப்பாணம். 9997

## நாவற்குழி கிராமசபை கேள்வி விளம்பரம்

1. சகலகலாவல்லி ரோட்.

நாவற்குழி கிராமசபையின் விசேட ஆணையாளராகிய என்னுல் 23-08-78 காலை 10-00 மணிவரை மேற்படி வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்,

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் எனக்கு அனுப்பப்படுவதுடன் அதே நேரத்தில் அதன் நகல் பிரதியொன்று யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல்வேண்டும். கேள்வி அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயர் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரப் பணம் ரூபா 25/-ம் பிணைப்பணம் ரூபா 50/-ம் செலுத்தியதன் பேரில் என்னுல் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் 1978 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15,17,22 ஆகிய திகதிகளில் மாத்திரமே வழங்கப்படும்.

மேலதிக விபரங்களைச்சபை அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

சொ. கணேசநாதன்
விசேட ஆணையாளர்
நாவற்குழி கிராமசபை

நாவற்குழி கிராமசபை,
நாவற்குழி, கைதடி.
07-08-78.
0100

## பதவி வெற்றிடம்

பதவி:— மருந்தாளர்/ அப்போதிக்கரி

வேதனம்:— 175—250 / 7.50X10

வயதெல்லை:—25—60 க்கும் உட்பட்டவராக இருத்தல்வேண்டும்

கல்வித் தகமை;—

(அ) மொழி, எண்கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. (சாதாரண தரம்) இரசாயனவியலும், பௌதிகவியலும், சித்தி யெய்தியவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

(ஆ) ஒரு வருடகாலம், மருந்தாளராகவோ அல்லது அப்போதிக்கரியாகவோ இருத்தல் வேண்டும்

(இ) சங்க தொழிற்பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமைவழங்கப்படும்

பிணை:— உரொக்கம் ரூபா 1000/-, ஆதனப் பிணை ரூ 2000/-

விண்ணப்ப முடிவு திகதி;— 20-08-1978.

**ஆ. கந்தையா,**
தலைவர்.

புலோலி ப.நோ கூ சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.
1978-08-05
9985

ஈழநாடு
The Eelanaadu

# 'விவாதத்தில்கலந்துகொண்டுவெளியே சென்றதும் என்னைக்கைதுசெய்தனர்'

## -- பேரவையில் அமிர்'

### 157-வது ஷரத்து

புதிய அரசியலமைப்பின் 157-வது ஷரத்தை நீக்கிவிடுவதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

புதிய அரசியலமைப்புத் திட்டத்தை யாரும் மாற்றுவதற்கு முயற்சி செய்தாலோ, முயற்சி செய்வோருக்கு உதவியாய் இருந்தாலோ அல்லது அத்தகைய முயற்சிகளில் பங்கு பற்றினாலோ உயர் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டால் பத்து வருடகாலத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கவும் அல்லது இரு தண்டனைகளையும் விதிக்கவும் அத்துடன் அவரது ஆதனம் அனைத்தையும் பறிமுதல் செய்யவும் இந்த ஷரத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு மசோதாமீது பேரவையில் கடந்த நான்கு தினங்களாக விவாதம் நடைபெற்று வருகிறது. இந்த விவாதத்தில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. ஆளும்கட்சியினரே விவாதத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

ஆயினும் புதிய அரசியலமைப்பு சம்பந்தமான விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கலந்து கொள்ளாததற்கானகாரணத்தை விளக்கி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் பேரவையில் உரை நிகழ்த்தியிருந்தார்.

நாலரை மணிநேரம் தமிழிலும், ஆங்கிலத்திலும் திரு. அமிர்தலிங்கம் நிகழ்த்திய உரை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த நாட்டில் மொழிப் பிரச்னை தோன்றிய வரலாற்றை அவர் விரிவாகத் தமது உரையில் எடுத்துக் காட்டினார்.

''சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச் சந்தர்ப்பத்தில் தங்களது இந்தநீண்ட உரை, நிறைந்த கருத்துச் செறிவுடனும், சொல்லாட்சியுடனும் தர்க்க ரீதியாக அமைந்திருந்தது. இந்த உரையின்போது தலைமை தாங்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமைப்படுகிறேன்'' என்று சபாநாயகரே பாராட்டியிருக்கிறார்.

திரு. அமிர்தலிங்கம் தமது உரையில் இந்த 157-வது ஷரத்துப் பற்றியும் குரல் எழுப்பினார்.

''தெரிவுக் குழுவுக்கும் தெரியாமல் தெரிவுக் குழுவுக்கு அப்பால்போய் 157-வது விதி போன்ற ஒரு விதியைக் கொண்டு வருகின்ற அரசியலமைப்பின் விவாதத்திலே இந்த அரசியலமைப்புக்கு ஆதரவாக நாம் எப்படி கலந்து கொள்ள முடியும்'' என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டிருந்தார்.

இந்த 157-வது ஷரத்துக்கு மற்றும் அரசியல் கட்சிகளும் ஆட்சேபக்குரல் எழுப்பத் தொடங்கின.

157-வது ஷரத்து அரசியலமைப்பிலிருந்து நீக்கப்படும் என்பதைப் பேரவையில் நேற்று முன்தினம் பிரதமர் திரு. பிரேமதாசா அறிவித்தார்.

'புதிய அரசியலமைப்பில் 157-வது ஷரத்தை நல்ல நோக்கத்துடனேயே நாம் சேர்த்துக்கொண்டோம். ஆனால் சிலர் இந்த ஷரத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு அச்சம் தெரிவித்துள்ளனர்'' என்று பிரதமர் கூறினார்.

157-வது ஷரத்தை நீக்காமலே புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பெரும்பான்மைப்பலம் அரசாங்கத்துக்கு இருக்கிறது.

புதிய அரசியலமைப்பு மீதான விவாதத்தை ஒரு நாளிலேயே முடித்துக் கொண்டு அரசியலமைப்பை நிறைவேற்றுவதில் எந்தவித தடையுமில்லை.

ஆயினும் 157-வது ஷரத்துப்பற்றித் தெரிவிக்கப்பட்ட அச்சத்துக்குமதிப்பளித்து அந்த ஷரத்தை அரசியலமைப்பிலிருந்து நீக்கிக் கொள்வதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

ஜனநாயகத்தில் அரசுக்கு உள்ள நம்பிக்கையையே இது எடுத்துக் காட்டுகிறது.

157-வது ஷரத்தை நீக்க முன்வந்ததன் மூலம் அரசு தனது பெருமையை மேலும் உயர்த்திக் கொண்டிருக்கிறது.

(முன் தொடர்ச்சி)

1958ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் திகதி இந்தச் சபையிலே பிரதமர் பேசுவதற்கு முன் எனக்கும் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. கடைசியாகப் பிரதமர் பேசினார்- ஒன்பது மணிக்குமேல். பேசிவிட்டு வெளியே சென்ற எங்களைக் கைதுசெய்தார்கள். எங்களில் சிலரைக் கைதுசெய்து கொண்டு போய் கோல்பேஸ் ஹோட்டலில் தனி அறையில் வைத்தார்கள். வேறு சிலரை அவரவர் வீட்டில்சிறை வைத்தார்கள். 10 நாட்கள் வைத்திருந்துவிட்டு ஸ்ரன்மோ கிரசன்றிலேயுள்ள ஒருவீட்டிலே என்னையும் ஏழு பாராளுமன் அங்கத்தவர்களையும் அடைத்து வைத்தார்கள். அப்படி அடைத்து வைத்து விட்டுத்தான் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா தமிழ்மொழி உபயோகச் சட்டத்தை இங்கு நிறைவேற்றினார். அப்பொழுது அவர் எங்களுக்கு ''நீங்கள் காவலில் இருந்து கொண்டே விவாதத்தில் கலந்துகொள்வதாக இருந்தால் கலந்துகொள்ளலாம்'' என்று சொல்லி அனுப்பினர். ''சுதந்திர மனிதர்களாக வருவதாக இருந்தால் வருவோமே தவிர பொலிஸ் காவலிலே வந்து அங்கே பேசிவிட்டு மறுபடியும் பொலிஸ்காவலிலே காவல் கைதிகளாகச் செல்வதாக இருந்தால் அதற்கு ஆயத்தமில்லை'' என்று நாங்கள் பதில் கொடுத்தோம்.

நாங்களில்லாமல் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது இருந்த எதிர்க்கட்சிகள்—ஐக்கிய தேசியக் கட்சி உட்பட இது டென்மார்க் இளவரசன் இல்லாமல் ஹம்லற் நாடகம் நடக்கிறது — என்று கூறி தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாத இச் சபையிலே இதை நிறைவேற்றுவது பொருத்தமற்றது என்று கூறி வெளிநடப்புச் செய்தன, ஆளும் கட்சி மாத்திரம் அதை நிறைவேறியது.

#### கச்சேரிகளின்முன் நடந்த மறியல்

பின்னர் வந்த அரசாங்கங்கள் எல்லாம் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா நிறைவேற்றிய இந்த இரண்டு சட்டங்களிலும் யாரும் தொடக்கூடாது; பரிசுத்தமானவை என்று கூறி அவற்றைத் தொடமறுத்தன. அதற்கு உட்பட்டுத்தான் எதையும் செய்யவேண்டும் எனக் கூறின. நாங்கள் இயன்ற அளவுகிளர்ச்சி செய்தோம். 1961 ஆம் ஆண்டு ஒரு பெரிய சத்தியாக்கிரக இயக்கத்தை நடாத்தினோம். எவ்வளவு பலாத்காரம் தலைதூக்காத வகையிலே ஒரு மக்கள் இயக்கத்தை நடாத்தினோம். இந்த நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயுள்ள ஐந்து கச்சேரிகளுக்கும் முன்னால் நாங்கள் மறியல் செய்தோம் அந்த மறியலிலே இன்று பிரதிக் காணி அமைச்சராக இருக்கின்ற சம்மாந்துறை பிரதிநிதி (ஜனாப் எம். ஏ மஜீது) கூடக் கலந்துகொண்டார், இரண்டுமாத காலமாக அந்த ஐந்து கச்சேரிகளின் முன்னால் நாங்கள் வேறு எதுவும் செய்யவில்லை. கச்சேரி வாயிலிலே குறுக்கே இருந்தோம். பொலிசார் அடித்தாலென்ன, இராணுவம் வந்து மிரட்டினாலென்ன நாம் அசையாமலிருந்தோம். எனக்கு அடித்ததினால் நல்ல காயம் ஏற்பட்டது. அப்படி இருக்கும் நாம் அங்கே சத்தியாக்கிரகம் செய்தோம். நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மிகத்திறமையாக அவசரகாலச் சட்டத்தைக்கொண்டு வந்தார். 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்து எங்களில் 74 பேரை—என்னுடைய மனைவி உட்பட 74 பேரை-பனாகொட இராணுவ முகாமிலே ஆறு மாத காலம் அடைத்து வைத்தார்கள். அதன்பின் தொடர்ந்தும் நாம் எம்மை வருத்தி இந்நாட்டில் எங்கள் மொழி உரிமைக்காக வாதாடினோம்.

1965 ஆம் ஆண்டிலே ஒரு மாற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. தேர்தலில் டட்லிசேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி தெரிவுசெய்யப்பட்ட கட்சிகளில்பெரும் கட்சியாக பாராளுமன்றத்துக்கு வந்தது. ஆனால் அந்தக் கட்சி தம் சொந்த பலத்தைக் கொண்டு அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலையில் இருந்தது. அந்த நேரத்திலே எமது கட்சித் தலைவர்களுக்கும் ஐக்கியதேசியச் கட்சித் தலைவர்களான டட்லிசேனநாயக்காவுக்கும் இன்றைய சனாதிபதியான ஜே. ஆர். ஜயவர்த்தனக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதன் பலனாக 1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி இரண்டுகட்சித் தலைவர்களுக்குமிடையிலே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதாவது 1965 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி டட்லிசேனநாயக்க எங்கள் தலைவர் திரு. செல்வநாயகத்துக்குமிடையிலே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

உண்மையிலே அந்த ஒப்பந்தத்தை எழுத்திலே போட்டு இரு தலைவர்களும் கையெழுத்திட வேண்டுமென்று கூறியவர் இன்றைய ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜயவர்த்தன, டொக்டர் எம். வீ. பீ. பீரிஸின் வீட்டிலே நாம் சந்தித்து இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். அந்த ஒப்பந்தத்திலே தமிழ்மொழி உரிமையைப்பற்றிச் சட்டவிதிகளைக்கொண்டு வருவதற்கும் தமிழிலே இலங்கை முழுவதிலும் கருமம் ஆற்றுகின்ற உரிமைக்கு வழிவகும்பதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது அதைத் தொடர்ந்து பிரதமர் திரு டட்லிசேனநாயக்கா தலைமையிலான தேசிய அரசாங்கத்திலே நாமும் சேர்ந்தோம். அந்த அரசாங்கம் 1966ஆம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டவிதிகளை இச் சபையிலே கொண்டுவந்தது. அதை இந்தச் சபையிலேசமர்ப்பித்துப் பேசியவர் இன்று ஜனாதிபதியாக இருக்கின்ற திரு ஜே. ஆர், ஜயவர்த்தன தான்.

ஆனல் அப்பொழுது எதிர்க்கட்சியிலே இருந்தவர்கள் அதை எதிர்த்து ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள் அப்பொழுது அப்பொழுது கொள்ளுப்பிட்டியிலே பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியேற்பட்டது. அதனால் ரதன சார தேரோ என்ற ஒரு பௌத்த பிக்கு உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த நெருக்கடிக்கு மத்தியிலும் அந்த அரசாங்கம் அச்சட்ட விதிகளை நிறைவேற்றியது அன்று. ஆனல், 1966 ஆம் ஆண்டு அவ்வளவு நெருக்கடியின் மத்தியிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டவிதிகள், இற்றைவரை அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதை நான் இங்கே மிகவும் துக்கத்துடனும், வேதனையுடனும் கூறிவைக்க விரும்புகிறேன். 12 வருடங்களாக அவை செயலற்றிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மாறி, மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அத்தனகல்லை அங்கத்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலே 1970-ம் ஆண்டு ஆட்சி பீடமேறியதும் அந்தச் சட்டவிதிகள் செல்லுபடியற்றவை என்று கூறிவிட்டார்கள். அப்பொழுது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க சொன்னார்,

'I think you have no right to vindicate because I think these Regulations are ultra vires the main Ac'

25-6-71 ஆம் தேதிய ஹன்சாட்டிலே தொகுதி 1, பத்தி 2107 இல் அவர் அவ்வாறு கூறியிருக்கின்றார். கலாநிதி கொல்வின் ஆர். த. சில்வா ஹன்சார்ட் தொகுதி 2, பத்தி 334 இலே (8-5-1975) தெளிவாகக் கூறினார்.

'That is the view of this Government as was the view we held and continue to hold - these that Regulations areultravires theTamil Language (Special Provisions) Act and that therefore this Government was not applying these Regulations in the Adminstration'

என்று மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டவிதிகள் 12 வருடங்கள் செயற்படுத்தப்படவில்லை. இவ்வளவு காலத்துக்குப் பின்னர் இப்பொழுது இந்த அரசியல் அமைப்பிலே தமிழ்மொழி உரிமை பற்றிச் சில விதிவிதிகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன

#### ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது

இவ்விதிகளை ஏட்டிலே போட்டுவிட்டால் மட்டும் போதும் என்று யாரும் நினைத்துவிட முடியாது, எமது அனுபவம் அதற்கு மாறாக இருக்கிறது. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது'' என்று தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது. வெறுமனே சட்டங்களை ஆக்குவதனால்மாத்திரம் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்த முடியாது. சட்டங்கள் சரியான முறையில் அமுல் நடத்தப்பட வேண்டும். நான் ஒன்றை இச்சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழ்மொழி உபயோகம்பற்றிய அரசியலமைப்பு

(6ம் பக்கம் பார்க்க)

## நல்லை உற்சவம் இன்று ஆரம்பம்

# அருந்தமிழால்வாழ்த்தி அவனருள் பெறுவோம்

தித்திக்கும் செந்தமிழில் தேனூறும் வாசகத்தை எத்திக்கும் பரப்பி இங்கு எழிலார்ந்த தமிழணங்கி ஏற்றத்தை உணர்த்திட தோன்றிய இன்னருட் செல்வராம அருணை முனிவர் பன்னிரு தடந்தோள் வள்ளலாம் முருகப் பெருமானை ஒரு தமிழ் தெய்வமாகக் காணுகின்றார். தன்னேரில்லாத தமிழமுதைப் பருகுவதற்காக முருகன் எத்தனையா திருவிளையாடல்களைச் செய்தான். அவனுக்குத் தமிழிலே ஆராத காதல்.



தமிழ் மூதாட்டியாம் ஔவையாரிடமிருந்து இன்தமிழ்ச் செய்யுளை கேட்டு இன்புற, இடைக்குலத்து மகனாக; எழிலார்ந்த இளம் சிறுவனாக வந்தமுருகன் பொய்யாமொழியாரிடம் புதுமைத் தமிழ்கேட்டுப் பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே மின்போலும் ஒளிவீசும் வேலேந்திய வேடுவனாக வந்தவன்.

முதற்சங்கத்துப் புலவருள் ஒருவனாய் இருந்து தமிழராய்ந்தான். இன்னும் அகத்தமிழ் இலக்கணமாம் இறையனார் களவியல் என்னும் நூற்கு உரைவிரித்த சங்கப்புலவர் தம் உரையுள் சிறந்த உரை இது

(7-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

மனக்கமும் உற்சாகமுமின்றிஅரியசெயல்எதுவும் நிகழ்ந்ததில்லை.

— எமர்சன்



இலங்கை இளங்கலைஞர் மன்றம் நடாத்திய வீணை கீழ்ப்பிரிவு இடைபோட்டியில் செல்வி கலைச்செல்வி தியாக லிங்கம் முதலாம் இடத்தைப்பெற்று யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோவிடம் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார். வேம்படி மகளிர் கல்லூரியில் 10ம் வகுப்பில் கல்விகற்கும் இவர் திரு. கே. கிருஷ்ணமூர்த்திதம்பதிகளின் மாணவியாவார்.

## அனலைதீவு விழாக்கோலம் ஐயனார் உற்சவம் ஆரம்பம்

(அனலைதீவு)

அனலைதீவு ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது இம்மாதம் 18ம் திகதி தேர்த் திருவிழாவும், 19ம் திகதி பூங்காவன உற்சவமும் நிகழும்.

இந்திய சிற்பாசாரியார்களின் கைவண்ணத்தில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சித்திரத்தேர் வேலைகள்பூர்த்தியடையும் தறுவாயில்உள்ளது. தற்போது விமான அமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருகிற தை மாதம் சித்திரத்தேரின் வெள்ளோட்டத்தை நடத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகிறது.

வழமைபோல் அன்னதான சபையினர் பதினொரு திருவிழா நாட்களிலும் அன்னதானம் வழங்கவுள்ளனர்.

ஐயனாரை தமது குலதெய்வமாகப்பூஜிக்கும் அனலைதீவு மக்கள், தங்கள் திருவிழாக்களை வெகு விமரிசையாகக் கொண்டாடி அனலைதீவு முழுக் கிராமத்தையுமே சைவமணம் கமழச்செய்து விழாக்கோலம் பூணுவிப்பது வழமையான காரியமாகும்.

அனலைதீவு ஐயனார் பற்றிய விசேட நிகழ்ச்சி நேற்றும் நேற்றுமுன்தினமும் இலங்கை வானொலியில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## விவாதத்தில் . . . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

1619-ம் ஆண்டிலே தனியாகத தான் போர்ததுக்கீசர் வெற்றி கொண்டார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம் அவர்களினால் இங்கே தாக்கப்பட்டுக் கொண்டிருந்த கண்டி மன்னனுக்கு உதவியாக இந்தியாவிலேயிருந்து படைகள் வருவதற்கு யாழ்ப்பாண அரசன் உதவி செய்கிறான் என்பது அவ்வாறு தாக்கி அவனை வெற்றிகொண்டார்கள். போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் யுத்த முனையிலே எமது ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் 1796 ம் ஆண்டு யுத்தத்தினால் எமது பிரதேசத்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர்தான் முதல் முதலாக 1833 ம் ஆண்டிலே இந்நாட்டிலே தமிழ் பேசும் மக்களுடைய பிரதேசங்களை—வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை—ஒரே நிருவாகத்தின்கீழ் கொண்டுவந்தார்கள். ஆங்கிலேயர் எம்மை ஒரே நிர்வாகத்தின்கீழ் அடிமைத்தளையின்கீழ் கொண்டு வந்ததால் எமது தனி உரிமை அழிந்து ஒழிந்துபோய்விடவில்லை. நாட்டிற்குக் கிடைத்த சுதந்திரம் எமக்கும் கிடைத்திருக்கவேண்டும். அதற்குப் பதிலாக ஜனநாயகத்தின் பேரால் பெரும்பான்மை என்ற போர்வையில் ஒரு பகுதி மக்களின் கையிலே அரசியல் அதிகாரம் சென்றடைய அவர்கள் தயவில் தங்கியிருப்பவர்களாக, எவ்வித உரிமையுமற்றவர்களாக தமிழ் தேசிய இனம் ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழ் தேசிய இனம் புதிதாக எதையும் கேட்கவில்லை. தமக்கு உரித்தான ஆட்சி உரிமையைத்தான் தமிழ் தேசிய இனம் கேட்கிறது. எமது பாரம்பரிய பிரதேசத்தில் எமது மக்கள் வாழ்ந்துவந்த பூமியில் எம்மை நாம் தொடர்ந்தும் ஆள நாம் சுதந்திரம் உள்ள மக்களாக வாழ உள்ள உரிமையைத்தான் நாம் கேட்டு நிற்கின்றோம். அதற்கு உத்தரவாதம் இந்த அரசியலமைப்பிலே இல்லை. அதனால்தான் இந்த அரசியலமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம்.

அதுமாத்திரமல்ல, எமது மக்கள் ஒரு தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது சுயநிர்ணய உரிமையை உபயோகித்து தம்மைத்தாம் ஆளவும் ஒரு சுதந்திரத் தமிழ் ஈழத்தை நிறுவவும் வேண்டுமென்று எமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்தக் கட்டளைப்படி பணி புரிவது எமது கடமை. இந்த நிலையை நான் மிகத் தெளிவாக இங்கு எடுத்துக் கூறுகிறேன். (ம)

(தொடரும்)

## கோலாலம்பூரில் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா

கோலாலம்பூர். ஆக. 8

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் நூற்றாண்டு விழா இம்மாத 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மலேஷியாவில் கொண்டாடப்படுகிறது.

நூற்றாண்டு விழா மலேஷிய குழு இதற்கான ஏற்பாடுகளைக் கவனித்துவருகிறது

கோலாலம்பூர் ஸ்கொற்ரேட் கலா மண்டபத்தில் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள நூற்றாண்டு விழாவில் சொற்பொழிவுகள் திருமுறைப்பாடல், நடனம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். (இ)

# "இறந்தவரின் வயிற்றில் 8 அவுன்ஸ் கள் இருந்தது"

## வேலணை கொலை வழக்கில் வைத்திய அதிகாரி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''காலஞ்சென்றவரின் வாயிலிருந்து நுரை வந்தபோது கள் மணத்தது. அவர் நியாயமான கள் குடித்திருந்தார். இறந்தவரின் வயிற்றில் 8 அவுன்ஸ் கள் இருந்தது என்று வேலணைக் கொலை வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம் சாட்சியமன்த்த ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் ஜெகநாதன் தமது சாட்சியத்தில் கூறினார்.

இவ்வழக்கில் தம்பிப்பிள்ளை திருநாவுக்கரசு என்பவர் சாட்சியமளித்தார். சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: நீரும் மற்றும் காட்சிகளும் சட்டத்தரணி ஒருவரைக் சந்திக்க சாவகச்சேரி போனீர்கள்?-இல்லை.

சட்: சாட்சி சொல்லும்போது அவரைத் தொடர்ந்து சண்முகசுந்தரம் என்றீர்?-ஆம்.

சட்: பொலிசிற்கு சொன்னதை அப்படியே சொல்லப் பார்க்கிறீர்?-ஆம்.

சட்; பொலிஸ் வாக்குமூலப்பிரதியை நீர் எடுக்கவில்லை?-எடுக்கத் தேவையில்லை

சட்: உண்ணுவிரதம் புனிதமான சத்தியாக்கிரக இயக்கமாக இருந்தது?-ஆம்.

சட்; புனிதமான இயக்கம்?-ஆம்.

சட்: குற்றம் எதுவும் புரியமாட்டார்கள்?-ஆம்.

சட்; ஆனல் மனைவிக்கு மட்டும் கத்தியால் வெட்டுவார்?-வெட்டவில்லை.

சட்: வெட்டியதாக விளக்கமறியலில் இருந்தார்.

சட்: மனைவி புகார் செய்தார்?-ஆத்திரத்தில் சொல்லியிருப்பார்.

சட்: காயம் எப்படி வந்தது?-தானே வெட்டியிருப்பார்.

சட்: கொஞ்சக் காலம் விளக்கமறியலில் இருந்தீர்?-இல்லை, ஒன்றரை நாள் மட்டும்.

சட்; மனைவிக்கும் உமக்கும் என்ன தகராறு?-வித்தியாசம் ஒன்றும் இல்லை.

சட்: மனைவிக்கு அப்படி என்ன கோபம்?-தெரியாது.

நீதி: என்ன தகராறு?-பண விஷயமாக.

சட்: வழக்கு சமாதானமாகப் போனீர்கள்?-ஆம்.

சட்: 1ம் எதிரிக்கு சிவராசா அடித்தாக வழக்கு ஒன்று இருந்தது?-ஆம்.

சட்: 2ம் எதிரியைத் தெரியுமா?-தெரியாது.

சட்: நீதிபதிக்கு எல்லாருடைய பெயரும் தெரியும் என்றீர்?-ஆம்.

சட்: அடையாளம் கர்ட்டினீரா?- ஆம். ஊர்காவற்றுறைப் பொலிஸில்.

சட்: ஏன் பொலிசுக்குப் போனீர்?- அடையாளம் காட்ட வரச் சொன்னார்கள்.

சட்: யார்? சார் ஜன்ட் சண்முகராசா.

சட்: கூண்டிற்குள் 4 எதிரிகளைத் தவிரவேறு எவரும் இல்லை? ஆம்.

சட்: நீர் 2ம் எதிரியை காட்டினீர்? ஆம்.

சட்: 2ம் எதிரியை எப்ப முதல் தெரியும்?- யாழ்ப்பாணத்தில் சந்தித்திருக்கிறேன்.

சட்: கதைத்தவரா? அடிக்கடிகாணும் போது கதைப்போம்.

சட்; ஆனல் பெயர் மட்டும் தெரியாது? ஆம்.

சட்: எப்படிக் கதைப்பீர்? அவர் அண்ணே என்பார் நான் தம்பி என்பேன்

சட்; இந்தக் காரை முன்பு தெரியும்? ஆம்.

சட்: ஒரு ஐயர் வைத்திருந்தார்? ஆம்

சட்; உமக்கு ஒரு கண் பார்வையில்லை? ஆம்

சட்: எப்படி லைசென்ஸ் கிடைத்தது? ட்ரயல் ஓடி கிடைத்தது (முன்பு)

சட்: டாக்டர் உம்மைச் சோதித்தவரா?ஆம்

சட்: உமது கமக்கட்டில் காயம் ஏற்பட்டது? ஆம்

சட்: 2ம் எதிரி கையால் அடித்தார்?ஆம்

சட்: காயம் ஏற்படவில்லை? இல்லை.

சட்: உமக்கு கார் அடித்ததா?- ஆம்.

சட்: காயம் ஏற்படவில்லை?- இல்லை.

சட்: இராசதுரை கண்டவரா? ஆம்

சட்: நீர் இறந்தவரின் உறவினரா? ஆம்

சட்: இராசதுரை உறவினரில்லை?இல்லை

சட்டத்தரணி எம்,ஸ்ரீகாந்த குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: கார் உம்மை அடிக்க சுற்றிவந்தது? ஆம்

சட்: கள்ளுக் கொட்டிலில் எத்தனை பேர் இருந்தனர்? 50 பேர்.

சட்: 3ம் எதிரி என்ன கொண்டு வந்தார்?- கொடுவாள்கத்தி.

சட்: 3ம் எதிரி 4ம் எதிரியின் மச்சான்?- ஆம்.

சட்: 4ம் எதிரியை பிடித்திருக்க 3ம் எதிரி ஒன்றும் செய்யவில்லை?- இல்லை.

### வி.என்.நவரத்தினம் குறுக்கு விசாரணை

சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: உண்ணுவிரதத்தில் குழப்பம் நடந்தது?- மன வருத்தம் ஏற்பட்டது.

சட்: குழப்பியவருக்குப் பாடம்படிப்பிக்க வேண்டும் என நினைத்தார்?- அப்படி நான் நினைக்கவில்லை.

சட்: 1-ம், 2-ம். 3ம் எதிரிகளுக்கு 4-ம் எதிரி உதவி செய்தார்?-ஆம்.

சட்: அதனல் 4ம் எதிரியையும் இதில் சேர்த்திருக்கிறீர்' ஆம்.

சட்: சம்பவம்பற்றி முதலில் தகப்பனருக்கு கூறினீர்?- ஆம்.

சட்: அதற்குமுன் யாருக்கும் கூறவில்லை?- இல்லை.

சட்: இராசதுரைக்கு கூறினீரா?- இல்லை.

சட்: ஏன் சொல்லவில்லை?- சொல்லக்கூடிய ஆட்கள் வரவில்லை.

நீதிபதி: ஆற்றலா ஆட்களா வரவில்லை?- ஆட்கள்.

கூட்: பாலசிங்கம் வந்தாரா?- ஆம்.

சட்: அவருக்கு சொன்னீரா?- ஆம்.

சட்: மாணிக்கவாசகர் வந்தாரா?- ஆம்.

சட்: அவருக்கு சொன்னீரோ?-

சட்: 60ம் ஆண்டு இறந்தவர் அடித்தது ஞாபகமிருக்கா?-இல்லை,

சட்: உமக்கு கண்பார்வை இல்லையென்றல் ஆத்திரம் வருமா?-இல்லை.

சட்; சுப்பிரமணியத்திற்கும் 4ம் எதிரிக்கும் கோபதாபமில்லை?- இல்லை.

சட்: உமக்கு தமிழ் நன்கு தெரியும்- ஆம்.

சட்: விசிக்கினர், வீசினர் என்பதற்கு வித்தியாசம் தெரியுமா?- ஆம்,

சட்: இரண்டும் ஒரே கருத்தா?- ஆம்.

சட்: பொலிசுக்கு வீசினர் என்று கூறினீரா?- இல்லை.

### டாக்டர் சாட்சியம்

ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் ஜெகநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது இறந்தவர்மீது பிரேத பரிசோதனை நடத்தினேன். 1ம் காயம் கடுமையானது. இறந்தவர் திடஆரோக்கியத்துட

(5ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பு தேசிய லொத்தர் சபை தலைமைக் காரியாலயத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 673-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1—வது பரிசு:
**05 P 0304**
ரூபா 1,00,000

2—வது பரிசு:
**02 K 0004**
ரூபா 40,000

3—வது பரிசு:
**24 A 0915**
ரூபா 10,000

தலா 1230 ரூபா ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 07 A 0093 | 08 A 0121 |
| 21 A 0004 | 27 A 0235 |
| 02 B 0224 | 03 B 0160 |
| 06 B 0100 | 06 B 0557 |
| 07 B 0462 | 14 B 0091 |
| 20 B 0309 | 23 B 0252 |
| 26 B 0917 | 28 B 0840 |
| 07 C 0240 | 03 D 0868 |
| 05 D 0256 | 08 D 0840 |
| 13 D 0874 | 16 D 0117 |
| 20 D 0373 | 02 E 0121 |
| 08 E 0949 | 18 E 0025 |
| 18 E 0175 | 27 E 0479 |
| 07 F 0322 | 19 F 0678 |
| 27 F 0999 | 08 G 0762 |
| 15 G 0701 | 06 H 0866 |
| 19 H 0752 | 19 H 0856 |
| 21 H 0267 | 26 H 0165 |
| 03 J 0234 | 18 J 0713 |
| 28 J 0286 | 06 K 0475 |
| 07 K 0685 | 11 K 0852 |
| 21 K 0756 | 21 K 0833 |
| 01 L 0092 | 14 L 0619 |
| 28 L 0195 | 01 M 0549 |
| 03 M 0172 | 11 M 0085 |
| 15 M 0309 | 10 M 0922 |
| 24 M 0276 | 11 N 0701 |
| 15 N 0217 | 20 N 0451 |
| 22 N 0972 | 02 O 0995 |
| 10 O 0744 | 18 O 0448 |
| 24 O 0029 | 25 O 0672 |
| 26 O 0293 | 28 O 0269 |
| 11 P 0906 | 13 P 0568 |
| 21 P 0403 | 22 P 0658 |
| 17 Q 0877 | 02 R 0069 |
| 05 R 0927 | 08 R 0655 |
| 09 R 0641 | 28 R 0566 |
| 07 S 0398 | 09 S 0965 |
| 15 T 0815 | 08 U 0050 |
| 16 U 0151 | 17 U 0918 |
| 27 U 0600 | 02 V 0644 |
| 05 V 0008 | 07 V 0112 |
| 24 V 0396 | 25 V 0858 |
| 07 W 0809 | 12 W 0737 |
| 13 W 0977 | 25 W 0488 |
| 04 X 0620 | 10 X 0017 |
| 01 Y 0883 | 12 Y 0656 |
| 20 Y 0468 | 02 Z 0655 |
| 06 Z 0312 | 20 Z 0983 |
| 23 Z 0418 | 25 Z 0781 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

# "தமிழ் ஈழம் அமைக்க அரசு இடமளிக்காது!"

## பேரவையில் காமினி

(கொழும்பு)

**"புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, தேசிய அரசுப் பேரவையிடமும் மக்களிடமுமே இறைமை ஒப்படைக்கப்படும்" என்று நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா நேற்று தேசிய அரசுப்பேரவையில் குறிப்பிட்டார்.**

தேசிய அரசுப்பேரவை நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு சபாநாயகர் திரு. ஆனந்ததிஸ அல்விஸ் தலைமையில் கூடியது. அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

### நாட்டுக்கு கிடைத்த தலைமை

நேர்மை, துணிச்சலான ஒரு தலைமை இப்பொழுதுதான் நமது நாட்டுக்குக்கிடைத்துள்ளது. நமதுநாட்டில் ஜனநாயகம்பாதுகாக்கப்பட்டாகவேண்டும், புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய நமது நாடே பெரியதொரு ஜனநாயக நாடாகவும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடாகவும் திகழும். இதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

### தமிழ் ஈழம்

தமிழ் ஈழக்கோரிக்கை எழுப்பட்டுள்ளது. இந்தநாட்டில் தமிழ்ஈழம் அமைக்க அரசு எச்சந்தர்ப்பத்திலும் இடமளிக்காது.

"இந்த நாட்டில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் காப்பாற்றும் பொறுப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கே உண்டு. கடந்த அரசில் நாடு கண்ட பல விளைவுகளையும், அவசரகாலசட்டத்தின் கீழ் அதிகார துஷ்பிரயோகம் எவ்வளவுக்கு தலைதூக்கியது என்பதையும் மக்கள் அறிவார்கள்.

### அனைவருக்கும் சமஉரிமை

"புதிய அரசியலமைப்பின் கீழ், இந்தநாட்டில் அனைத்து சமூக மக்களுக்கும் சமஉரிமை வழங்கப்படும். பாராளுமன்றத்தின் இறைமை பாதுகாக்கப்படும். தனிநபர் சுதந்திரம் பாதுகாக்கப்படும்.

### பாராளுமன்ற ஆணையாளர்

விரைவில் பாராளுமன்ற ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். அரசு அதிகாரிகள் பொதுமக்களுக்கு இழைக்கும் அநீதிபற்றி முறைப்பாடுகள் வரும் பட்சத்தில் இப்புகார்கள் பற்றி பாராளுமன்ற ஆணையாளர்விசாரணை செய்து நீதிவழங்குவார்."

### ஜாபீர் ஏ. காதர் பேச்சு

கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது எம். பி. ஜனுப் ஜாபீர் ஏ. காதர் உரைநிகழ்த்துகையில்; இந்த நாட்டின் புதிய அரசியலமைப்பை முஸ்லிம் மக்கள் அங்கீகரித்துள்ளனர் என்றும் முஸ்லிம் மக்களின் பிரச்னைகளுக்கு புதிய அரசியமைப்பு தீர்வு காண உதவும் என்றும் கூறினர்.

## அரிசிமா கலந்த பாண்

(வண்ணார்பண்ணை)

அரிசிமா கலந்த பரீட்சார்த்த பாண் செய்கை வெற்றி அளித்துள்ளது.

75 வீதம் கோதுமை மாவுடன் 25 வீதமான அரிசிமா கலந்து தயாரித்த பாண் நேற்று முன்தினம் உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் பார்வைக்குக் கொடுக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையிலுள்ள ஒரு பேக்கரியினுல் இந்த அரிசிமா பாண் தயாரிக்கப்பட்டுப் பாவனைக்கு விடப்பட்டது.

இப்பாணைப் பார்வையிட்ட யாழ். பிரதேச உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஜே. எஸ். ஆனந்தன் இத்தயாரிப்பாளருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

இத்தயாரிப்பின்மூலம் 25 வீதமான மா இறக்குமதியில் மிச்சம் காண முடியுமென்றும், அரிசிமாவின் தேவையும், சத்தும் பயன்பட முடியும் என்றும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

## இறந்தவரின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

னிருந்தார். 1ம், 2ம் காயங்கள் வெவ்வேறு காயங்கள் குத்தப்பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியினுல் மரணம் ஏற்பட்டது. வயிற்றில் 8 அவுன்ஸ் கள்ளு இருந்தது.

சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: இறந்தவரின் வாயிலிருந்து நுரைவந்தபோது கள் மணத்தது?-ஆம்

சட்: வயிற்றிலும் கள்பணம் இருந்தது?-ஆம்.

சட்! இறப்பதற்கு முன் நியாயமான அளவு கள்குடித்திருந்தீர்?-ஆம்.

சட்: கைவிரலில் சிறுகாயம் இருந்தது?-ஆம்.

சட்: போத்தல் துண்டுகளால் அக்காயம் ஏற்பட்டிருக்கலாம்?-ஆம்.

சட்; காயம் கூரிய ஆயுதத்தால் ஏற்பட்டது?-ஆம்.

வேலணையைச் சேர்ந்த நாகராசா தம்பிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் மரணவிசாரணையில் இறந்தவரை அடையாளம் காட்டியதாக கூறினர்.

சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது, இறந்தவர் மருமகனென்றும், திருநர்வுக்கரசுவின் தந்தை என்றும் கூறினர்.

திருநாவுக்கரசு சிறுபிள்ளையாக இருந்தபோது சுப்பிரமணியத்தால் தாக்கப்பட்டு கண்பார்வை இழந்தாரென்றும், கூறினர்.

சட்: யாரும் அவரை குருடன் என்று கிண்டல் செய்தால், சுப்பிரமணியத்துடன் வந்து சண்டைபிடிப்பார்?- எனக்குத் தெரியாது.

சட்: நீர் அதே வீட்டில் இருக்கிறீர்?-இல்லை.

சட்: மருமகன் இறந்தபின் வேறுவழக்கில் திருநாவுக்கரசு விளக்கமறியலில் இருந்தார்?- ஆம்.

சட்: மருமகன் நல்லாய் குடிப் ரார்?- தோட்டக்காரரர் அதனுல் கொஞ்சம் கொஞ்சம் குடிப்பார்.

சட்: சம்பவம் நடந்த இடம் உமது வீட்டிலிருந்து எவ்வளவு தூரம்?- கால்மைல்.

விசாரணையைப் பார்ப்பதற்கு, நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். இந்திய பத்திரிகையான ஹிம்மத் பிரதிநிதி திரு. பகவந்தாஸ் விசாரணையைப் பார்க்க வந்திருந்தார்.

## "இன்றைய தமிழர் நிலை"

### இன்று கொழும்பில் 'அமிர்' உரை

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் கூட்டணி செயலதிபருமான திரு அ. அமிர்தலிங்கம் இன்றுமாலை கொட்டாஞ்சேனை விவேகானந்த சபை மண்டபத்தில் 'இன்றைய தமிழர் நிலை' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்புக்கிளையின் ஆதரவில் நடைபெறும் இக் கருத்தரங்கு கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும். (இ)

## ரம்லான் சிந்தனைகள்

பெருமானுர் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளதாக ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸி (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:-

"உங்களில் ஒருவர் நோன்பு திறந்தால் பேரீச்சங்கனிகொண்டு திறக்கவும். ஏனெனில் நிச்சயமாக அது பரக்கத் ஆகும். அதனை அவர் கிடைக்கப்பெறவில்லையாயின் நீரருந்தி நோன்பு திறக்கட்டும். அது [அகத்தையும், புறத்தையும் ]சுத்தப்படுத்தும் சாதனமாகும்.

ஆதாரம்:- மிஷ்காத்

தொகுத்தவர்: ஏ.சி.எம். மஸ்ஹூர், யாழ்நகர்.

## வேலணை கொலை வழக்கு:

# 'கண்டகோடரியால் காரின் கண்ணுடியை உடைத்தார்'

## முதலாம் எதிரி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"எனது காரில் 2-ம், 3-ம் எதிரிகள் சென்ருேம். காரை கள்ளுத்தவறணைக்கு முன்னுல் நிறுத்தினேம், திருநாவுக்கரசுவும் சுப்பிரமணியமும் நின்ருர்கள். திருநாவுக்கரசு வந்து 'சுவிச்' சாவியை எடுத்தார். பின்னர் கேட்டதும் தந்துவிட்டார். பின்பு கண்ட கோடரியை ஓங்கி என் மச்சானுக்கு எதிராக வழக்குப் போட்டனியாடா? என்று கேட்டு கார் முன் கண்ணுடியைக் கண்ட கோடரிமால் அடித்து நொருக்கினுர். சுப்பிரமணியம் கல்லால் எடுத்து காருக்குள் எறிந்தார்."

வேலணைக் கொலைவழக்கில் சாட்சியமளித்த முதலாவது எதிரி சொக்கலிங்கம் பூபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்யட்டது.

இவ்வழகில் வேலணையில் 77 பெப்ரவரி 16-ந் திகதி காங்கேசு சுப்பிரமணியத்தை கொலை செய்ததாக சொக்கலிங்கம் பூபாலசிங்கம். சின்னத்தம் தியாகராசர், அம்பலவாணர் சண்முகசுந்தரம், பாலகிருஷ்ணன் நாகரத்தினம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் சுட்டத்தரணி எம் சிவசிதம்பரம், சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தாவின் உதவியுடன் ஆஜரானுர். 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தா ஆஜரானுர். 4-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி என் சிறிகாந்தா சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானுர் அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜரானுர்.

1-ம் எதிரி சொக்கலிங்கம் பூபாலசிங்கம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

சி. எல். 5685 இலக்கக் கார் என்னுடையதல்ல. கூலிக்குக் கார் ஒடுகிறேன். 76 பெப்ரவரி 16-ம் திகதி வழமைபோல் காரைச் செலுத்திச் சென்றேன். காருக்குள் 2ம், 3-ம் எதிரிகள் இருந்தனர். தவறணைக்கு முன்னுல் காரை நிறுத்தியபோது திருநாவுக்கரசு கண்டக்கோடரியால் கார்க் கண்ணுடியை உடைத்தார். சுப்பிரமணியம் கல்லால் எறிந்தார். திருநாவுக்கரசு 'மச்சான்' என்று சொன்னது இறந்தவரின் தம்பியை. சிவராசா அடித்தது பற்றி கோர்ட்டில் ஒரு வழக்கு இருந்தது. சுப்பிரமணியம் எறிந்த கல் காருக்குள் இருந்த 2-ம் எதிரி தியாகராசாவுக்குப் பட்டது. தியாகராசா காரில் இருந்து இறங்கினுர். திருநாவுக்கரசு எனக்குக் கோடரியால் வெட்டவந்தார். 2-ம் எதிரி தியாகராசா தடுத்தார். அவருக்குக் காயம் ஏற்பட்டதெனப் பிறகு தெரியவந்தது. காரில் ஏறி முதலாளியிடம் சொல்லப்போனேன். முதலாளியான 4-ம் எதிரி வீட்டிலில்லை. அரவது மனைவியிடம் சொன்னேன். பின்னர் பொலிஸ் நிலையத்திற்குப் போனேன். 3-ம் எதிரி அலுவலாக வழியில் இறங்கிவிட்டார். கண்ணுடி உடைந்ததால் 1500 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. 2 பேரும் பொலிஸ் போனேம்.

"நான் காரினுல் திருநாவுக்கரசுவையும், சுப்பிரமணியத்தையும் அடிக்க எத்தனிக்வில்லை திருநாவுக்கரசுவை காரினுல் மோதவில்லை. சுப்பிரமணியம் பக்கத்தில் நின்ருர். அப்பொழுது காயம் ஏற்படவில்லை.

### 4ம் எதிரி வரவில்லை

"4ம் எதிரி காரில் வரவில்லை. 3ம் எதிரியின் கையில் ஆயுதம் எதையும் நான் காணவில்லை. 2ம் எதிரியைப் பொலிசார் துண்டுகொடுத்து டாக்டரிடம் அனுப்பினர். எனக்கு முன்பு வழக்குகளில் சம்பந்தமில்லை".

சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவின் கேள்விகளுக்கு 1ம் எதிரி பதிலளித்தார்.

சட்டத்தரணி: 3ம் எதிரி எங்கு இறங்கினுர்?- ஊர்காவற்றுறையில்.

சட்; பின் 3ம் எதிரி பொலிஸ் நிலையத்திற்குவந்தார்?- ஆம்.

சட்டத்தரணி வி. என். நவரத்தினம் கேள்விகளுக்கு 1ம் எதிரி பதிலளித்தார்.

சட்: கார் 4ம் எதிரியினுடையது?-ஆம்.

சட்: அதனை எப்பவாங்கினுர்?- 2 நாட்களுக்குமுன்.

சட்: அதற்குமுன் காருக்கு யார்சொந்தக்காரர்?- வேலணை அம்மன் கோவில் ஐயர்.

சட்: கார் ஓடுவதில் ஒரு பிரச்னை ஏற்பட்டது?-ஆம்.

சட்; சிவ்ராசாவிக்கும் உமக்கும் ஏற்பட்ட பிரச்னையால் யால் கோபம் ஏற்பட்டது?- ஆம்.

சட்: காரை நீர் ஓடாமலிருக்க முயற்சி நடந்தது?- ஆம்.

சட்: ஒருமாதமாக நீர் கார் ஓடவில்லை?- இல்லை.

சட்: நீர் வேலையில்லாமலிருந்ததால் 4-ம் எதிரி காரை வாங்கித்தந்தார்?-ஆம்.

சட்: பொலிசுற்கு உடன் போனீர்?-ஆம்.

சட்: அரைமணி நேரத்தில் போனீர்?-ஆம்.

சட்: சட்டத்தரணியிடம் சென்று ஆலோசிக்கவில்லை? -இல்லை.

சட்: அன்று சிவராத்திரி? -ஆம்.

சட்: பொது விடுமுறை தினம்?-ஆம்.

சட்: முதல் நாள் முதலாளி (4-ம் எதிரி) எங்கே போனுர்?-மெயில் வண்டியில் கொழும்பு போனுர்.

(8-ம் பக்கம் பார்க்க)

# உலக மக்கள் நலனுக்கு ஓயாது குரல் கொடுத்தவர்

## பாப்பரசரின் மறைவு குறித்து வால்ட்ஹெய்ம் அனுதாபம்

நியூயோர்க், ஆக. 8

இரக்க சிந்தைகொண்ட பரிசுத்த பாப்பரசர் 6வது சின்னப்பர் உலக மக்களின் நலனுக்காக ஓயாது குரல் கொடுத்தார். அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

இவ்வாறு ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அன்னாரின் மறைவை ஒட்டி உலக நாடுகளிலுள்ள சமயத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களிடமிருந்து அனுதாபச் செய்திகள் வத்திக்கானுக்கு வந்துகுவிகின்றன என்று வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பல்வேறு நாடுகளில் துக்கம் அனுஷ்டிப்பு

பாப்பரசரின் மறைவை ஒட்டி எகிப்தில் ஒருவாரம் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என அதிபர் ஜனுப் அன்வர் சதாத் அறிவித்துள்ளார்.

### இந்தியாவில்

இந்தியாவில் உள்ள 9 லட்சம் கத்தோலிக்க மக்கள் 9 நாள் துக்கம் அனுஷ்டிப்பர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஷயரில்

ஷயரில் 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். (இ)

---

சரண்சிங், ராஜ்நாராயண்

# ராஜினுமா விவகார கடிதங்கள்

## ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன

புதுடில்லி, ஆக. 8

ஜனதா கட்சிக்குள் அண்மையில் தோன்றிய நெருக்கடியை அடுத்து முன்னுள் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயண் ஆகியோரை ராஜினுமாச் செய்யுமாறு பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் எழுதிய கடிதங்களின் பிரதிகளும் பிரதமரின் கடிதத்திற்கு முன்னுள் அமைச்சர் எழுதிய பதில் கடிதங்களின் பிரதிகளும் நேற்று ராஜ்ய சபையிலும் லோக சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டன.

திருவாளர்கள் சரணசிங், ராஜ்நாராயண் ஆகியோரது ராஜினுமாவை அடுத்து ராஜினுமாச் செய்துகொண்ட நான்கு ஸ்டேட் அமைச்சர்களின் ராஜினுமாக் கடிதங்களும் அங்கு சமர்ப்பிக்கப்பட்டன. (இ)

---

# கிருபளானி, ஜெ.பி.யின் தலையீடு ஆலோசனை ஏற்கப்படும்; அனுமதிக்க முடியாது

## ஜனதா கட்சித்தலைவர் கருத்து

புதுடில்லி, ஆக. 7

'ஜனதாகட்சியை உருவாக்க அரும்பாடுபட்ட ஆச்சார்யா கிருபளானியினதும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனதும் ஆலோசனைகளை ஜனதா கட்சி என்றுமே வரவேற்கத் தயாராக இருக்கிறது. அதேவேளையில் அரசு' நிர்வாகத்தில் அவர்களின் தலையீடு என்றுமே அனுமதிக்கப்பட மாட்டாது.'

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜனதா கட்சிக்குள் என்றுமே பிளவு ஏற்படமாட்டாது என தாம் உறுதியாக நம்புவதாகவும் திரு. சந்திரசேகர் தெரிவித்தார். (இ)

---

# இந்திய பத்திரிகைச் சபை

புதுடில்லி, ஆக. 8

இந்தியாவில் பத்திரிகைச் சபை ஒன்றை அமைக்கும் மசோதாவை ராஜ்ய சபை நேற்று ஏற்றுக்கொண்டது.

இச்சபையில் தலைவருடன் 28 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர் என ராஜ்ய சபையில் தெரிவிக்கப்பட்டது.

ஆளும் ஜனதா கட்சி ஏற்கனவே உறுதிஅளித்தபடி பத்திரிகைத் துறைக்குச் சுதந்திரம் அளிக்கும் நோக்குடனேயே பத்திரிகைச் சபை அமைக்கப்படுகிறது என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. எல். கே. அட்வாணி மேற்சொன்ன மசோதா மீதான விவாதம் ராஜ்யசபையில் நடைபெற்றபோது கூறினுர்.

தவருக நடக்கும் பத்திரிகைகளைக் கண்டிக்கவும், எச்சரிக்கவுமே இப்பத்திரிகைச் சபைக்கு உரிமை உண்டென்றும் எவரையும் தண்டிக்கும் உரிமை இச்சபைக்குக் கிடையாது என்றும் திரு. அட்வாணி தெரிவித்தார். (இ)

---

# பொறியியலாளர் சிரேஷ்ட சித்தி

கியவ், ஆக. 8

தென்உக்ரேனிலுள்ள இராட்சத உருக்காலையான ஸபுரேஸ்தால் உருக்காலையின் சர்வதேச ஐ. நா. பொறியியல் நுணுக்கப் பிரிவு சர்வதேச பொறியியலாளர்கள் மத்தியில் நடாத்திய தொழில் நுணுக்கப் போட்டிப் பரீட்சையொன்றில் இலங்கை உருக்காலைக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பொறியியலாளர் டி. எம். எச். பி. தஸநாயக்க சிரேஷ்ட சித்தி பெற்றுள்ளார். எ

---

# இன்றைய இராசிப்பலன்

ஆடிமாதம் 24-ந் திகதி
புதன்கிழமை
(9-8-78)

**மேடம்:-** எதிர்பார்த்த இனங்களில் தடை ஏற்பட்டு வரும், தொழில்துறை அவ்வளவு திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை, அவசரப் போக்கைத்தவிர்க்கவும்.

**இடபம்:-** திருப்திகரமான திருப்பத்திற்கு இடமுண்டு, விருந்தினர்கள் வருகைக்கும் உறவினர்களின் ஆதரவக்கும் இடமேற்படும், மகிழ்ச்சிகரமான தினம்.

**மிதுனம்:-** உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள், தொழில்துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும், சிலர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான இடமாற்றமும் ஏற்படலாம்.

**கடகம்:-** பண விடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும், கல்வித்துறையில் பிள்ளைகளின் திறமை சுடர்பரப்பும், நீண்டநாள் நண்பர் ஒருவர் உதவிக்கு வருவார்.

**சிங்கம்:-** சிக்கல்கள் சிலந்தி வலைப்பின்னல், தற்பெருமையின் மூலம் பணம் பாழாவதற்கு இடமுண்டு, பூமிப் பிணக்குகள் தலைகாட்டாவண்ணம் தவிர்க்கவும், பொறுமை நன்று.

**கன்னி:-** கவலைகளின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள், அவசரப் போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்த்து கொள்ளவும், பொறுமை விரும்பத்தக்கது.

**துலாம்:-** பொருளாதாரத்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும், கொடுக்கல் வாங்கல்மூலம் அதிக ஆதாயத்திற்கு இடமுண்டு, குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு.

**விருச்சிகம்:-** முன்னேற்றப் பாதையில் தடைகள் தென்படும், தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் உருவாகலாம், சகோதரவழியால் சஞ்சலமான செய்திகிடைக்கும்.

**தனுசு:-** சகல துறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகலாம், மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றம் தென்படும், வாகனச் சொந்தக்காரருக்கு அதிக ஆதாயமுண்டு.

**மகரம்:-** புதிய பாதையொன்று உங்களை எதிர் நோக்கியுள்ளது. நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம், குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமுகமாக இருக்கும்.

**கும்பம்:-** வேவுக்கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். அபாயகரமான தொழிலில் ஈடுபடுபவர்கள் கவனம் வேண்டும், திருப்தியற்ற தினம்.

**மீனம்:-** குடும்பவாழ்க்கை குதூகலம் நிரம்பியதாக இருக்கும். காதலர்களாயின் இத்தினம் கற்கண்டுபோல் இனிக்கும், பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

---

# விவாதத்தில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விதிகள் அமுல் நடத்தப்படுவதற்கு ஏற்ற துணை விதிகள் எதுவும் இந்த அரசியலமைப்பில் இல்லை. உதாரணமாக உத்தியோக மொழி, நிர்வாக மொழிபற்றிய சட்டத்தை நடத்தவேண்டியவர்கள் உத்தியோகத்தர்கள். தமிழில் கருமமாற்றும் உரிமை உண்டு என்று சட்டத்தில் எழுதி வைத்துவிட்டால்போதாது. காரியாலயத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்கவேண்டும். காரியாலய ஊழியருக்குத் தமிழ் மொழி தெரிந்தால்தான் அதை அவர்களால் நிறைவேற்ற முடியும். ஆனல் அரசியலமைப்பிலே எந்த உத்தியோகத்தரையும் தமிழ் மொழியைக் கற்குமாறு கேட்பதற்கு எந்தவிதமான விதியும் இல்லை. அதற்கு மாருகத் தமிழ் மொழிமூலம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் உத்தியோக மொழியாகிய சிங்களத்தைக் கற்க வற்புறுத்த அரசியலமைப்பிலே விதி இடம் பெற்றிருக்கிறது. தமிழ் மொழிபற்றிய சட்ட விதிகளை அமுலாக்க எந்த உத்தியோகத்தரும் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்று கேட்க விதி இல்லாத இடத்து யார் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தப் போகிருர்கள்? உண்மையில் நடைமுறையில் இது உயிரற்ற ஒரு சட்டமாக இருக்கும் ஆபத்து உண்டென்பதைக் கடந்தகால அனுபவத்தைக் கொண்டு எமது மக்கள் சுட்டிக்காட்டுகிருர்கள்.

இதை நாம் மிகவும் பொறுப்பு உணர்ச்சியோடு, இந்த நாட்டில் நாம் அடைந்த வேதனைதரும் அனுபவத்தைக் கொண்டு கூறுகிருேம். ஒரு தமிழ் மகன் அனுராதபுரத்திலோ தென்னிலங்கையிலோ உள்ள ஒரு கச்சேரியில் ''எனக்குத் தமிழில் கருமமாற்ற உரிமையுண்டு; எனக்குத் தமிழ்ப் படிவம் தா; தமிழில் நிரப்பித் தரப்போகிறேன்'' என்று கூறுகிருன் என்று வைத்துக்கொள்வோம். இன்றைக்கு நாடு இருக்கும் சூழ் நிலையில் அத்தகைய ஒருவர் உயிருடன் வீடு போவாரா என்று சொல்ல முடியாது. இது வெறும் கற்பனை அல்ல. அதனுல்தான் நான் கூறுகிறேன் ஏட்டிலே ஒரு சில உரிமைகளை எழுதி வைத்தால்மட்டும்போதாது என்று. இவ்வளவு காலமும் தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்துப் போராடியதன் விளைவாக இந்த அரசியலமைப்பிலே ஓரளவு பலன் அளிக்கப்பட்டிருந்தாலும் இதனுல்மாத்திரம் எமது மொழி உரிமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டதாக இல்லை. அதுமாத்திரமல்ல: இந்த அரசியலமைப்பை நீதி சமத்துவம் என்ற தத்துவ அடிப்படையில் ஆக்கி இருப்பதாகக் கௌரவ பிரதமா கூறினுர். நான் கேட்கிறேன், சமத்துவம் எங்கே இருக்கிறது? இந்த அரசியலமைப்பிலே 18 வது விதி கூறுகிறது.

'The official language of SriLanka shall be Sinhala.'

9 வது விதி கூறுகிறது.

'The republic of SriLanka shall give to Buddhism the foremost, place and accordingly it shall be the duty of the State to protect and fosterthe BuddhaSasana, whille assuring to all religions the rights granted by Articles 10 and 14 (e).''

விதிகள் 10 இன் கீழும் 14(e) யின் கீழும் மற்றைய மதத்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமை, தத்தம் மதங்களை அனுஷ்டிக்கின்ற உரிமை. ஆனல் பௌத்த மதத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமை அரசாங்கத்தால் பேணி வளர்க்கப்படுகின்ற உரிமை. அந்த உரிமை மற்றைய மதங்களுக்கு இல்லை. கிறிஸ்தவ மதத்துக்கு அந்த உரிமை இல்லை. சைவ மதத்துக்கு இல்லை. இஸ்லாமிய மதத்துக்கு இல்லை. எங்கே இருக்கிறது சமத்துவம்?

சிங்கள மொழிமாத்திரம் அரசாங்க மொழி. தமிழ் மொழி ஒரு தேசிய மொழி. சில உரிமைகளுக்குமாத்திரம் உபயோகிக்கட்படுகிற மொழி. சமத்துவம் என்று கூறும் பொழுது எண்ணிக்கையில் சமத்துவத்தை நான் குறிப்பிடவில்லை. ஆனல் நிலையிலே குணத்திலே, பண்பிலே சமத்துவத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அந்தச் சமத்துவம் எங்கே இருக்கிறது?

பிரதமர் பேசும்பொழுது ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக்கு அதிலேகூறப்பட்டிருக்கிற தேசியக் கொடிக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவரும் எண்ணத்தைக் கூறினுர்கள். அந்தக் கொடியின் நாலு மூலைகளிலும் அரசிலை இடம்பெற வேண்டுமென்ற வற்புறுத்தலினுல் அதற்கு அரசாங்கம் செவிசாய்த்து அந்தக் கொடியை அந்த வகையிலே மாற்ற இருப்பதாக அவர் எடுத்துக் கூறினுா. அரசிலை அங்கே இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கைக்கு அடிப்படைக் காரணம் என்ன? பௌத்த மதத்தோடு தொடர்புடைய பௌத்த மதத்தின் ஒருசின்னமாகிய அரசிலை அந்தக் கொடியிலே இடம் பெற வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை தான் இங்கே இடம் பெற்றிருக்கிறது. அப்படியானல் எங்கே சமத்துவம்? பெரும்பான்மை மதத்தினர், பெரும்பான்மை மொழியைப் பேசுவோர் எதைக் கேட்டாலும் அதற்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற நிலை இருந்தால் சமத்துவம் எங்கே இருக்கிறது என்றுதான் நான் கேட்கிறேன்.

### சமத்துவம் இந்நாட்டில் இல்லை

பிரதமர் சமத்துவம் நீதி ஆகியவற்றின் அடிப்படையிலேதான் தாம் இயங்குவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனல் சமத்துவம் இடம்பெறவில்லை என்பதைக் காட்டத்தான் நான் இவற்றைக் குறிப்பிட நேரிட்டது. இந்த நாட்டிலேயுள்ள பல்வேறு மதங்களுக்கிடையில் சமத்துவம் இல்லை; இந்த நாட்டிலேயுள்ள பல்வேறு மொழிவாரி இனங்களுக்கிடையில் சமத்துவம் இல்லை என்பதைக் காட்டத்தான் நான் இவற்றை எடுத்துக் கூறினேன்.

ஆளும் கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பாதிக்கின்ற பிரச்னைகள் சிலவற்றை இனங்கண்டு குறிப்பிட்டிருந்தது. அவற்றிலே ஒன்று, முக்கியமாகக் குடியேற்றம் பற்றியது. பாரம்பரியமாக ஒரு மொழியைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசத்திலே வேற்று மொழி மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றி அங்கே வாழ்கிற மக்களைச் சிறுபான்மையோராக்கி அவர்களுக்கு அரசியலுரிமை, வேறு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் 1956 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் நாங்கள் முன்வைத்து வந்தோம். இதையொட்டிக் காலஞ்சென்ற பிரதமர் பண்டார நாயக்க அவாகளோடு எங்கள் தலைவர் செய்த ஒப்பந்தத்தில் சில தெளிவான முடிவுகளுக்கு வந்தோம். 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ந் திகதி கையெழுத்தான அந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
5 TH MERCENARY &
FINALWEEK
Peter Fonda,
DIAMOND
MERCENARIES

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
வி. பி. கணேசன்-சுபாஷினி
நான் உங்கள்
தோழன்

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
விஜயகுமார்
கே. ஆர். விஜயா
ஜானகிசபதம்

## நிர்வாகிகள்

[ஊர்காவற்றுறை]

தம்பாட்டி கிராமமுன்னேற்றச்சங்க கூட்டத்தை ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைத்தார். நிர்வாகிகள் தெரிவின் போது தலைவராக திரு. சி. லோகநாதனும் உபதலைவராக திரு. ம. நடராசாவும் செயலாளராக திரு.மு. செல்வராசாவும் உபசெயலாளராக திரு. ந. வித்தினேஸ்வரனும் தனுதிகாரியாக நா.அரசரெத்தினமும் கணக்குப்பரிசோதகராக திரு. இ. ரகுநாதனும் தெரியப்பட்டனர்.

ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரியப்பட்டது.

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45காட்சிகள்
இனிய நாதம் கேட்கும் 2 வது தெய்வம் தந்த வாரம்!
ரகுநாதன்... குமுதினி ...சந்திரகலா... தனரத்தினம்
நடித்த
**தெய்வம் தந்த வீடு** (சினிமாஸ் கோப்)

**REGAL** Jaffna
Daily at 4-45, 7- & 9-30 p m. only
The Story of a Love that Defied Death
Gamini Fonseka
in
**'SEETHA DEVI'**
Eastman Color (English)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
**மன்மத லீலை**
(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ராஜகுமாரி
**குலேபகாவலி**
நாளை முதல் சித்தி

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி இரு தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**படித்தால் மட்டும் போதுமா**
(புதியபிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
**அக்கரை பச்சை**
10-ந் திகதி முதல் செல்வம்

**லிடோ** (யாழ்.நகர்) போன்: 7692 தினசரி 4 காட்சிகள்
**வீர அபிமன்யு**

# விவாதத்தில்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின் அதையொட்டி; ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் காரணமாக அதிலே சிலமாற்றங்கள் செய்த நேரத்தில் காலஞ்சென்ற பண்டாரநாயக்க 16-8-57 ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதிலே அவர் எந்த நீதியான அரசாங்கமும் இந்த விஷயத்தில் கைக்கொள்ள வேண்டிய ஓர் அடிப்படைக் கொள்கையைத் தெளிவுறுத்தினூர்.

இது 16-8-57ல் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கை. ஐக்கிய தேசியக் கட்சித் தலைகளான டட்லி சேனநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன 1965-ம் ஆண்டு திருவாளர் செல்வநாயகத்தோடு எழுதிய ஒப்பந்தத்தில் இதை ஏற்றுக் கொண்டனர்.

திரு. என். டென்சில் பெர்ணண்டோ. (கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் பிரதி அமைச்சர்.)

அது மூலப் பிரதியா?

திரு. ஏ. அமிர்தலிங்கம்: அது மூலப்பிரதியல்ல. (குறுக்கீடு) ஜனுதிபதியைக் கேளுங்கள் அவர் சொல்வார்.

திரு. என். டென்சில் பெர்ணண்டோ ஜனுதிபதி இச்சபையின் உறுப்பினரல்ல. எனவே யாராவது பொறுப்பேற்கவேண்டும்.

திரு. ஏ. அமிர்தலிங்கம் நானே அங்கு இருந்தேன்.

திரு. என். டென்சில் பெர்ணண்டோ இருக்கலாம். யாராவது அதன் அதிகாரபூர்வத்துக்குப் பொறுப்பேற்கவேண்டும். இருதலைவர்களுக்கிடையிலான ஒப்பந்தம்.

திரு. என். டென்சில் பெர்ணண்டோ மேன்மை தங்கிய ஜனுதிபதி இச்சபையின் உறுப்பினரல்ல.

திரு. காமினி திஸநாயக்கா நீர்ப்பாசன மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சர் அவர் ஒரு முக்கியமான அம்சத்தைக் கிளப்பியிருக்கிறுர்.

திரு. அமிர்நலிககம் வாசிக்குர் இந்தநாட்டிலேயுள்ள இருபெரும் கட்சிகளின் தலைவர்களும் ஏற்றுக்கொண்ட அடிப்படையை மறந்துவிடயங்கள் நடைபெற்று வருவதாலேதான் இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்கள் இன்று மிகவும் வேதனையடைந்த நிலையில் இருக்கிறுர்கள், இந்த நாட்டின் எந்தப் பகுதியிலும், எந்த இடத்திலும் நாம் பயமின்றி, எந்தவிதமான தாக்குதலிலிருந்தும் தப்பித் தஞ்சம் புகுந்துவாழ ஒருபகுதி தமக்கு இல்லாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறுர்கள். அதனுலேதான் அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்தக் குடியேற்றம் பற்றித் தமிழ்பேசும் மக்கள் மனதிலே இருக்கின்ற அச்சம் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறது. ஆனல் அந்த அச்சத்தைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையோ அந்த அச்சத்தைத் தீர்ப்பதற்கான எந்தவிதமான திட்டங்களையோ இந்த அரசியலமைப்பிலே காண முடியாமலிருக்கிறது. அதற்கு அடிப்படையாக இருக்கவேண்டிய எந்த அம்சமும் இங்கே இடம்பெருதது மிகவும் வேதனையைத் தருகின்றதென்பதை இங்கே கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்த அரசியலமைப்பிலேயுள்ள வேறு பல விடயங்களை எடுத்துக் கூற வேண்டியிருந்தாலும் அடிப்படை உரிமைகள் பற்றிய விடயங்களையும் ஏனைய விடயங்களையும் ஆங்கிலத்திலே பேசுகின்றபொழுது எடுத்துக்கூற விரும்புகின்றேன் எனது தமிழ்ப் பேச்சை முடிக்கு முன்னர் நான் கூறவிரும்புவது ஒன்றே ஒன்றுதான். தமக்குக் கிடைத்த மக்கள் கட்டளையின் பிரகாரம் இந்த யாப்பை யாத்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. எம்மைப் பொறுத்தவரை எமக்குக் கிடைத்த எமது மக்களின் கட்டளையின் அடிப்படையிலே இந்த அரசியல் யாப்பை ஏற்றுக்கொள்ளவோ இந்த அரசியல் யாப்பைநிறைவேற்ற உடந்தையாக இருக்கவோ எமக்கு உரிமையில்லை. யாப்பு எமது மக்களைச் கட்டுப்படுததக்கூடியதல்ல. நான் ஆரம்பத்திலே கூறியது போல இன்றைக்கு நடைமுறையிலே இருக்கின்ற அரசியல் யாப்பு எப்படி எமது மக்களுடைய சம்மதத்தோடு கொண்டுவரப்படாத காரணத்தால் எம்மைக் கட்டுப்படுத்தாதுஎன்று நாம் நீதிமன்றததிலே வாதாடினேமோ அதேபோல இந்த அரசியல் யாப்பை பொறுத்தவரையிலும் எமது நிலையை நான் தெளிவாக எடுததுக்கூற கடமைப்பட்டவனுக இருக்கின்றேன்.

இந்த யாப்பிலே சில சில விடயங்கள் உதாரணமாக குடியுரிமை விடயததிலே பதிவுப் பிரஜைக்கும் வம்சாவளிப் பிரஜைக்கும் உள்ள விததியாசம் போன்றவை நீக்கப்பட்டதை நான் குறைத்துக்கூறவில்லை. ஆனல் எமது அடிப்படை நிலைமாற்றப்படவில்லை. இந்த நாட்டிலே இரு தேசிய இனத்தினர் வாழ்ந்து வருகின்றுர்கள். பரம்பரையாக வாழ்ந்து வருகின்றுர்கள். அந்நிய ஆதிக்கத்தின் கீழ் நாம் அடிமைப்பட்டு இருந்த நேரததிலேதனிததனியாக அடிமைப்பட்டோம். இந்த நாட்டிலே தமிழ் மக்களுடைய அரசை

(4-ம் பக்கம் பார்க்க)

## அருந்தமிழால்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வென எடுத்துரைக்க உருத்திர சன்மனெனும் மூங்கைப் பிள்ளை வடிவினனுக வந்தான். இவ்வரலாற்றை ''செந்தமிழ் நூல் விரித்தோன்'' என்னும் சொற்றெடரால் அருணை முனிவர் எமக்கெடுத்துணர்த்துகின்றுர்.

செந்தமிழ்க் கடவுளாகிய செவ்வேட்பரமனைப் பலஇடங்களிலும் வள்ளி கணவன் என்றே குறிக்கின்றனர். ஆனல் 'செந்தமிழ் நூல் விரித்தோனை' என்னும் தொடருக்கு அடுத்ததாக ''விளங்கு வள்ளி காந்தனை'' என்று அமைந்திருப்பதும் அறிஞர் சிந்திக்கற்பாலது. முருகன் செந்தமிழ்ப் பிரியன்; தமிழ் நாட்டில், தமிழ்க் குடியில் தமிழணங்காகத் திருவவதாரம் புரிந்து, தமிழிலே வளர்ந்து தவழ்ந்து தமிழிலே இருந்து, தமிழிலே வாழ்ந்த தமிழ்த் தமிழ்த்தாய் வள்ளியம்மை ஆதலின் அத் தமிழன்னையிடம் தமிழரசாகிய முருகவேள் மிகவும் அன்பு பாராட்டுகின்றனர். வள்ளியம்மை பேசும் தமிழ்ப் பேச்சில் முருகவேளுக்கு மிகவும் வேட்கை என்பதை.

''தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்'' என்று குமரகுருபரரும் ''தேளென்று பாகென்று வமிக்கொணு மொழித் தெய்வ வள்ளி கோன்''என்று அருணைமுனிவரும் எமக்கெடுத்துணர்த்துகின்றனர்.

செந்தமிழ்த் தெய்வமாம் முருகப் பெருமான் முத்தமிழில் வைத்த ஆராத காதலால் 'முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போனுக'' காட்சி தருகிறுன். ஏடா வேடா மூடா போடா என்று தமிழால் ஏசிய மொய் தாரணிகுழல் வள்ளியைத் திருமணம் செய்ததும் தமிழ் மீது கொண்டபற்றுலன்றே.

முருகப்பெருமான் தமிழால் வைதாரையும் வாழவைப்பாரென்று விளங்குவதால், வாழ்த்தினுர்க்கு அவர் எத்தகைய அருள்புரிவார் என்பது கருதற்பாலது. அப்பரமபதியை அடையும் நெறிகளிற் தலைசிறந்தது, அரிய தமிழால் அவரை வாழ்த்தி வணங்குதலாம்.

நல்லை முருகன் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நல்லூர் சென்று அவனருள் பெறுவோம்.

--சச்சி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ. இல:-MB/72

சிதம்பரப்பிள்ளை கதிரவேற்பிள்ளை
கைம் பெண் வள்ளியம்மை, விளானை, காரைநகர்
—வாதி.

எதிராக

1. மாணிக்கம் மயில்வாகனம்.
2. பெண் சரஸ்வதியும் இருவரும் இல. 91 14, இந்து மகளிர் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

—பிரதிவாதி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் MB/72-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை 10-30 மணி (29-8-78) தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்ந வழக்காளிகளுக்கு ரூபா 7750/-வும் மேலும் ரூபா 5,000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1976-ம் ஆண்டு ஆடி மாதம் 29-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின், தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 523/- கொடுக்கவேண்டியிருப்பதாலும்(கொடுபட்ட தொகை ரூபா 3750/-+ரூபா 200/-)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை முதியனுடை நில. பர 2 இரண்டு வீடும், பயிர்வகைகளும். மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும். எல்லை கிழக்கு நாகர் வேலாயுதம் பெண் சின்னத்தங்கச்சியினுதனம்.வடக்கு ஒழுங்கை. மேற்கு மாணிக்கம் மயில்வாகனம் பெண் சரஸ்வதியினுதனம். தெற்கு அருளப்புவினுதனம். இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்
(கொமிஷனரும் மதிப்பாளரும்)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
1-8-78

9990

# தனிநாட்டுக் கொள்கையை

## மறுபரிசிலனை செய்ய வேண்டும்

### கூட்டணியினருக்கு தொழில் அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தனித்தமிழ்நாடு அமைக்கும் தமது கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு தொழில் அமைச்சர் காப்டன் சி. பி. ஜே. செனவிரத்ன நேற்று முன்தினம் தேசிய அரசுப்பேரவையில் கோரிக்கை விடுத்தார்.

தமிழ் மக்களின் சகலபிரச்னைகளேயும் தீர்க்க நமது அரசு என்றுமே தயாராக இருக்கிறது. எனவே தான் தமிழர் கூட்டணியினர் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றும் திரு. செனவிரத்ன கூறினார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் தாம் எதுவிதகாரணமுமின்றி சிறைப் பிடிக்கப்பட்டதாகவும் கூறிய அவர் தமது சிறை அனுபவங்களையும் பேரவையில் விளக்கினார். (ம-இ)

## நல்லூரில் தற்காலிக பொலிஸ் நிலையம்

(ஆனைக்கோட்டை)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தற்காலிக பொலிஸ் நிலையம் நேற்று காலை திறக்கப்பட்டது.

இப்பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக திரு. எஸ். ஸ்ரீதரனும், மூன்று உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும், ஐந்து சார்ஜன்டுகளும், நாற்பது பொலிஸ் கான்ஸ்டபிள்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதைத் தவிர, இரகசியப் பொலிசாரும் கடமையாற்றுவார்கள்.

மேற்படி பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும் இன்ஸ்பெக்டர்களுக்கும், பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கும், நேற்றைய தினம் யாழ், பொலிஸ் நிலையத்தில் விசேட வகுப்பு ஒன்று யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. சி. ஆனந்தராசாவினல் நடத்தப்பட்டது. இவ்வகுப்பில் உதவிப் பொலிஸ் அதிபர், பொலிஸார் மத்தியில் பேசுகையில், ''மக்களுடன் நெருங்கிப் பழகி, எவ்வித பிரச்சினைகளுமின்றிச் சேவைசெய்ய வேண்டுமென்றும், கோவிலின் கட்டுப்பாட்டின் கீழ் உடை அணிந்து செல்லவேண்டுமென்றும், ஆலயத்திற்குள், சேர்ட், தொப்பி, சப்பாத்து அணிந்து செல்லக்கூடாதென்றும், மது போதையில் இருந்து கடமை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் தெரிவித்தார்.

## நல்லூர் உற்சவம் இன்று ஆரம்பம்

(ஆனைக்கோட்டை)

நல்லூர்க்கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இதற்கான கொடிச்சேலை நேற்று மாலை நல்லூர் கொண்டலடி வயிரவர் கோவிலுக்கு அருகாமையில் இருக்கும் முருகன் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக மங்கள வாத்தியத்துடன் முத்திரைச்சந்தை வீதிவழியாக ரதத்தில்நல்லூர் கந்தசாமி கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டது.

## கண்டகோடரி...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்: யார் போய் வழியனுப்பினீர்கள்?-நான்.

சட்: எந்த வாகனத்தில் ரயில் நிலையம் போனீர்?-எனது காரில்.

சட்: பிறகு முதலாளியைக் கண்டது எப்போ?-றிமான்டில்.

சட்: 2-ம் எதிரிக்கு நெற்றியில் காயம் கல் எறியால் ஏற்பட்டது?-ஆம்'

### குறுக்கு விசாரணை

அரச சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: பொலிஸ் வாக்குமூலத்தில் 10 மணிக்கு மீன் வாங்க பங்களா வடிக்கு போனதாக சொன்னீரா? ஞாபகமில்லை.

சட்: பொலிஸாருக்கு நடந்ததெல்லாம் சொன்னீர்? -ஆம்.

ஜூரி: காரை வேகமாக ஓட்டி தப்ப முயலவில்லையா? -அதற்குள் கண்ணாடியை அடித்து விட்டார்.

## 'பி' தரத்தில் அங்கீகாரம்

யாழூர்துரையின் கதைவசனத்தில் உருவாகும் ஜனுப். எம். எம். நிஸ்தாரின் வஸீரா பிலிம்ஸ் தயாரிப்பான 'உறங்காத உள்ளங்கள் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் 'பி' தரத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் தயாரிப்புப்பொறுப்பை கலாஸ்டேஜ் க. கதிர்காமத்தம்பி ஏற்றுக்கவனித்து வருகிறார்.

## சிங்களவர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர் பயமின்றி வாழமுடியாது. அப்படி வாழ்வதும் அபாயகரமானது.

''15-3-78ல் 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையொன்றில், தமிழர் வெளியிடங்களில் வாழாமல், வடக்கில் குடியேற வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது. அதனைப் படிக்கும்போது, சிங்களவர் எவரும் வடக்கில் வாழ்வது கடினம்; வாழ இடமளிக்கமாட்டார்களென்பது புலனாகிறது. எனக்குத் தமிழ் படிக்கத் தெரியாது. ஒரு நண்பர் இதனைப் படித்துக் கூறினார்.

### கூட்டணிக் கூட்டங்கள்

''தேர்தல் காலத்தில் பல கூட்டங்களுக்கும் நான் போனேன். யாழ். நாகவிகாரை, ரயில்நிலையம், சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவை அருகே தேர்தல் கூட்டங்கள் நடைபெற்றன. திரு. யோகேஸ்வரன் ஏற்பாடுசெய்திருந்த ஒரு கூட்டம், நாகவிகாரைக்கருகே நடைபெற்றது. சிங்களவர்களைக் கொன்று, அந்த இரத்தத்தில் நீச்சலடிக்கும்வரை நித்திரை வராதென்று ஒருவர் இக்கூட்டத்தில் கூறினார். அவர் யாரென்று தெரியாது.

''சிங்களவன்ட தோலில் செருப்பு சரிக்கட்டவேணும் (தமிழில் கூறுகிறார்) என்று ஒருவர் கூறினார். ''இங்குள்ள சிங்களவன்கள் ஒரு சம்பலுக்கும் காணு'' (தமிழில் கூறுகிறார்) என்றார். ''சிங்களவர்ர மையத்தில் நடந்து, தமிழ் ராஜ்யத்தைப் பெற போராடவேணும்'' (தமிழில் கூறுகிறார்) என்று ஒருவர் பேசினார். அவர் யாரென்று தெரியாது.''

சட்டத்தரணி பார்லட்: யாழ்ப்பாணத்தில் கமிஷன் விசாரணை நடத்தியபோது நீர் ஏன் அங்கு சாட்சியம் அளிக்கவில்லை?

சாட்சி: கொழும்பில்தான் சாட்சியமளிக்குமாறு எனக்கு கடிதம் வந்தது.

பார்லட்: கூட்டங்களுக்குப் பொலிஸார் சென்று குறிப்பு எடுப்பார்களென்பது உமக்குத் தெரியுமா?

சாட்சி; தெரியாது.

பார்லட்: யாழ்ப்டாணத்தில் கௌரவம் மிக்க பலர், சிங்களவர், அங்கு பாதிக்கப்படவில்லையென்று கமிஷன் முன்பாகச் சாட்சியமளித்துள்ளனர். அதெல்லாம் பொய்யா?

சாட்சி: அது தெரியாது. நான் இங்கு கூறுவது முழுக்க முழுக்க உண்மை.

(விசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும். (ம)

## பயிற்சிபெற்றும் வேலை இழந்திருக்கும்

## 64 ஆசிரியர்களுக்கும் நியமனம் கிடைக்கும்

(கொழும்பு)

தோட்டப் பாடசாலைகளில் கற்பித்து ஆசிரியகலாசாலைப் பயிற்சிபெற்றபின் வேலையை இழந்திருக்கும் 64 ஆசிரியர்களுக்குக் கல்விஅமைச்சு நியமனம் வழங்கவிருக்கிறது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கல்விஅமைச்சு ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ராஜலிங்கம் தெரிவித்தஆலோசனையின்பேரில் இவர்களுக்கு இந்நியமனம் கிடைக்கவிருக்கிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் திரு. ராஜலிங்கம் எம். பி.யினுல் சமர்ப்பிக்கப்பட்ட எல்லா ஆலோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திரு. ராஜலிங்கம் தெரிவித்த ஆலோசனைக்கிணங்க

- 4ம், 5ம் தர அதிபர்களின் சம்பளக்குறைபாடு நீக்கப்படும்.
- பாடசாலைகளில் மீண்டும் இரட்டை வகுப்பேற்றம் (டமிள்புரமோஷன்) அமுல் நடத்தப்படும்.
- அடுத்த ஆண்டிலிருந்து கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றவர்களும் ஆசிரிய நியமனத்திற்குத் தெரியப்படுவார்கள். உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே ஆசிரியநியமனத்திற்குத் தெரிவு செய்யப்படுவரென்ற விதியினுல் வசதியற்றவர்களும் கிராமப்புறத்தவர்களும் பாதிக்கப்படுவதாகக் கூட்டத்தில் திரு. ராஜலிங்கம் சுட்டிக்காட்டினார்.
- பள்ளிக்கூடங்களில் நிலவும் தளபாட தட்டுப்பாடு நீக்கப்படும்.
- இதுவரை மனையியல் கற்றவர்கள் தொடர்ந்து மனையியலில் பல்கலைக்கழகத்தில் கல்விபெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும். மனையியலில் இரு பிரிவாகப் பல்கலைக்கழகக் கல்விபெற வசதிசெய்யப்படும். பி. எஸ்.ஸி பட்டப் படிப்பும், டிப்ளோமா பட்டப் படிப்பும் மேற்கொள்ள மனையியல் மாணவருக்கு வசதியளிக்கப்படும்.
- வடக்கின் சகல பாடசாலைகளிலும் செப்டம்பர் இறுதி வாரம் சமூகக் குறைபாடு ஒழிப்பு வாரமாக அனுஷ்டிக்கப்படும். இது பற்றிய சுற்றுநிருபமும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்குமாறு வடமாநில வித்தியாதிபதிக்கு அறிவிக்கப்படும். (மஅ)

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. ச.ஊழியர்கள்

# வேலைநிறுத்தம் செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்டபடி தென்மராட்சி மேற்கு (கைதடி) பல. நோ. கூட்டுறவு பணியாளர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொள்வதென்று நேற்றுமாலை கூடிய இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளன கைதடிக்கிளை தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் 31ம் திகதி சங்க நிர்வாகத்துக்குத் தமது கோரிக்கையை விளக்கி சம்மேளனம் அறிக்கை சமர்ப்பித்திருந்தது. இவ்வறிக்கை சார்பாக நேற்றுமாலை இயக்குனர் குழு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் கூடிக்கலைந்தது, சங்கத் தலைவர் திரு. அ. ஜெ. செந்தில்நாதன் நிர்வாகசபைக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை.

பணியாளர்கள் தமது கோரிக்கையாக பின்வருவனவற்றை சமர்ப்பித்து நிவாரணம்கோரியிருந்தனர்.

ஊழியர் திரு க. சிவஞானம் ஆறு வருடங்களாக இச் சங்கத்தில் சேவையாற்றியிருந்தும், அவருக்கு சேவை முடிந்ததாக பொதுமுகாமையாளரால் அனுப்பப்பட்ட கடிதத்தை விலக்கி புதிய லொறி சங்கத்திற்கு வரும்வரை சேவையில் வைத்திருத்தல். பின்னர் சங்கத்தில் வரும் வெற்றிடங்களில் முன்னுரிமை வழங்குதல்.

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சட்டவாக்கத்தில் 55 வயது மூப்படைந்தவர் 60 வயதுவரை இளைப்பாற தகுதியுடையவராகக் கூறப்படுகிறது. சங்கநிர்வாகம் இச் சட்டவிதிகளை மீறி 55 வயதுடைய ஐவருக்கு வேலைநீக்க அறிவித்தல் வழங்கியமை.

பணியாளர்களின் சம்பளங்களை சீரானமுறையில் வழங்கவும், பணியாளர் வேதன நிலுவைப்பணத்தையும் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

## அனலைதீவில் இன்று

(அனலைதீவு)

அனலைதீவு ஐயனார் கோவில் முதலாம் திருவிழாவாகிய இன்று இரவு தமிழ்நாடு தவில் மேதை கலைமாமணி ரி. ஜி. முத்துக் குமரசாமிப்பிள்ளையின் தவில்கச்சேரி நடைபெறவுள்ளது. இவருடன் அகில இந்திய இசைவிழா புகழ்ஒலி ஸ்ரீசுரவேக கலியுகவரத தவில் வித்துவான் கைதடி பழனி சேர்ந்து தவில் வாசிப்பார்.

செல்வி விநோதினி அரசரத்தினத்தின் மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். வேலணையூர் அன்பர்களின் வசதியை முன்னிட்டு விசேட படகு சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

## இந்த நாட்டில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வரின் தோலில் செருப்புத் தைக்கவேண்டும் என்று திரு. யோகேஸ்வரன் கூறியிருந்ததாக தேரோ குறிப்பிட்டிருந்தார்'' என்று அமைச்சர் பேசியபோது—

சபாநாயகர்; இக்கூற்றைத் தான் திரு. அமிர்தலிங்கம் ஏற்கனவே மறுத்துவிட்டாரே. நீங்களும் அதனை ஏற்றுக் கொண்டுவிட்டீர்களே?

மத்யூ: திரு. அமிர்தலிங்கம் மறுத்துவிட்டார். இது திரு. யோகேஸ்வரன் பற்றியது.

சபாநாயகர்: நீங்கள் இதற்குப் பொறுப்பாக இருக்கிறீர்களா?

மத்யூ: யாழ். நாகவிகாரை தேரோ எனக்கு எழுதிய கடிதம் இருக்கிறது.

சபாநாயகர்: அப்படியானுல் அக்கடிதத்தைப் பேரவையில் சமர்ப்பியுங்கள்.

மத்யூ: சிங்களவரைக் கொன்று இரத்தத்தில் நீந்த வேண்டுமென்று திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கூறியிருக்கிருர்.

சபாநாயகர்: அது மனைவி கூறியதாக இருக்கலாம். திரு. அமிர்தலிங்கம் இதற்கும் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

மத்யூ: மனைவிக்காகப் பேரவை உறுப்பினர் மறுக்க முடியாது. மனைவி மறுக்கட்டும்

ஒரு கட்டத்தில், அமைச்சர் சிறில் மத்யூ பேசுகையில், ''சிங்களவர் யாழ்ப்பாணத்தில் வாழமுடியாதென்றும், கலவரகாலத்தில் சிங்களமக்கள் என்ன பாடுபட்டிருப்பார்களோ என்று குறிப்பிட்டார். (ம)

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் மாலை காரைநகர் சுப்பிரமணியவித்தியாசாலையில் திரு. சு. இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. ப. சண்முகரட்டினதாஸ் வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்கள்.


## ஐஸ் விற்பனைக்கு

சீ-நோர் அபிவிருத்தி நிறுவனத்தில் உற்பத்திசெய்யப்படும் ஐஸ் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:-

முகாமையாளர் (மீன்பிடிப் பகுதி),

சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,

காரை நகர். 0003


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram Ealanaadu - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.